491
REGISTRAR OF BOOKS
17 AUG 1951
MADRAS
ஊ211, N47PO
N51.5.10
157797

முதற் புத்தகம் ஆகஸ்ட் 15-ல் மலருகிறது.

விருந்து

மாதம் ஒரு புத்தகம்

பதிப்பாசிரியர் :

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை M. A., L. T.,

ஏஜன்சி முதலிய விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட், சென்னை—21.

திரையிடத் தயார்!

சிறந்த ஹிந்திப் படங்கள்!

ரெஹ்னு, தேவ் ஆனந்த், யாகூப் நடிக்கும்

(DIL RUBA) தில் ரூபா

சுலோச்சனு, சாட்டர்ஜி, குல்தீப் நடிக்கும்

(LADLI) லாட்லி

ரெஹ்னு, குல்தீப் நடிக்கும்

(LAJAWAB) லா ஜவாப்

கீதாபலி, குல்தீப் நடிக்கும்

(BANSARIA) பன்ஸாரியா

சாப்ரூ, நயாந்தாரா நடிக்கும்

(HUA SAVERA) ஹுவா சவேரா

தவருது காணவேண்டியவை.

○

மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு
பூரண வினியோக உரிமையாளர்கள்:

வீயார் பிலிம்ஸ்

தேவகோட்டை —இராமனுதபுரம் ஜில்லா.

VEEYAR FILMS — DEVAKOTTAI — RAMNAD DT.

1st Prize winners of C. No. 54. (1) A. K. V. Chettiar, Arni, (2) R. C. Panda, Dehra Dun (3 B. Singh, Dehra Dun (4) T. M. Achary, Rayachoti (5) P. V. Gopal, Chenglepet (6) N. R. Pillai, Travancore (7) S. Subbiah, Salem (8) B. R. R. Iyer, Coimbatore (9) A. T. G. Reddiar, Ramnad (1) P. K. V. Thimmappa, Raichur (11) D. Mallaya, Srikakulam (12) N. S. Pinto, Hireboil (13) T. P. Pillai, Chenglepet (14) E. P. T. Swami, Salem (15) A. Latif, Nalgonda (16) M. Suleman, Jalaun (17) N. S. Rao Warangal, In addition 18 persons are awarded III prize and one 5th prize.

Full particulars are published in the Rainbow dated 25—7—51

ரிஜிஸ்டர் நெ. 249 — போட்டி நெ. 56

ரூ. 25,000 பரிசு

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS'
KEY S. NO. 54 * 70 TO 85 = 310

71	76	80	83
85	78	74	73
82	81	77	70
72	75	79	84

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No.* 54 on 18-6-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramaswamy 18-7-51. Agent, Madras.

முடிவு தேதி 13-8-51 விடை 27-8-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

342

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 78 முதல் 93 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 342 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 56

28 (14) Thandavaraya Gramani Street, MADRAS - 21

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | ஜூலை 25, 1951 | இதழ் 10

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆடித் திங்கள் 9-ம் நாள்

உதாரணம் உண்டா?	....	கித்வாய், ஜெயின்	3
பிரதமந்திரியின் பிரச்னைகள்	....	கார்ட்டூன்	4
தேனியில் நடந்த திருக்கூத்து	....	தலையங்கம்	5
காலமும் கருத்தும்	....		6
யாருக்கு உங்கள் வாக்கு?	....	கடிதங்கள்	9
மறுமலர்ச்சி	....	சி. திருநாவுக்கரசு	12
வெறும் கலாட்டா	....	கில்லாடி	14
ஆசைக்கனல்	....	எஸ். ஆறுமுகம்	17
தமிழ் விருந்து	....	தமிழ்த்தும்பி	24
இரண்டு ரோஜாக்கள்	....	நா. பாண்டுரங்கன்	29
பரிசு யாருக்கு?	....	டி. ஜே. இன்பராஜ்	35
கல்லடி	....	வீர. பழனியப்பன்	38
வளரும் இலக்கியம்	...	அரசன்	53
சொர்க்கம்	...	புதுமைச்சித்தன்	57

உதாரணம் உண்டா?

நாங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை 'அவசரப்பட்ட செயல்' என்று பண்டித நேரு கூறியிருக்கிறார். அவரிடம் எங்களுக்கு மிக்க மரியாதை உண்டு. எனினும் அவர் கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள இயலாது. காங்கிரஸ் ஜனநாயக முறையில் மீண்டும் செயற்பட வகைசெய்ய வேண்டுமென வருஷக் கணக்காக நாங்கள் அவரிடம் வற்புறுத்தி வந்துள்ளோம். அவர் அதைச் செய்யத் தவறிவிட்டார். ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் ஒருவர் அந்த ஸ்தாபனத்தின் கொள்கைகள் அனைத்துக்குமே விரோதமாயிருப்பதற்கு உலகில் எங்காவது ஒரு உதாரணம் உண்டா? பாபு புருஷோத்தமதாஸ் டண்டனுக்கும், காங்கிரசின் பொருளாதார சமூக சர்வதேச அகதிகள் கொள்கைகளுக்குமிடையே பொதுவானது ஏதாவது உண்டா? இதன் விளைவு காங்கிரஸ் சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாகவும் இருக்கிறது.

[மந்திரிப் பதவி ராஜினாமாக்களை வாபஸ் வாங்கிக் கொண்டு கித்வாய், ஜெயின் இருவரும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை இவ்வாறு கூறுகிறது.]

பிரதம மந்திரியின் பிரச்னைகள்

தேனீயில் நடந்த திருக்கூத்து

தேனீயில் நடைபெற்ற கலவரம் தமிழகத்தையே பெரிய பரபரப்புக்குள்ளாக்கிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் 'அடிதடி'யில் எவ்வளவு நம்பிக்கையுள்ளவர்கள் என்பதை அந்த நிகழ்ச்சி நாட்டு மக்களுக்குப் புலப்படுத்தியது. 'அகிம்சா வீரர்கள்' மாற்றுக் கட்சியினர் கூட்டத்தைக் கலைக்கப் 'போர்க்கோலம்' கொண்ட புதுமையைத் தான் தேனீ, ஜூலை 4-ம் நாள் கண்டது. ஒரே நாளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டமும் காங்கிரஸ் கூட்டமும் நடைபெற ஏற்பாடு; முன்னேற்றக் கழகக் கூட்டம் பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடக்கம். அதற்கு முன்னரே, காங்கிரஸ் தோழர்கள் கலகத்தை, கம்பு, ஈட்டி, கல் சகிதம் 'அங்குரார்ப்பணம்' செய்துவிட்டார்கள்; கூடியிருந்த பொதுமக்களையும் கழகத் தோழர்களையும் இந்தப் 'படைக் கலங்களால்' தாக்க முனைந்துவிட்டார்கள். பலருக்குக் காயம்; ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். இந்தக் கலவரத்திற்குக் காரணமானவர்களென மதுரை ஜில்லா போர்டு தலைவர் தோழர் தியாகராஜன் உட்பட 133 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்கள். தோழர் தியாகராஜன் முன்னிலையில்தான் இத்தனை 'அலங்கோலமும்' அரங்கேற்றப்பட்டிருக்கிறது. இந்த அலங்கோலத்தால் அல்லற்பட்டவர்கள் முன்னேற்றக் கழகத்தாரும் பொதுமக்களும். இத்தகைய 'கொடுமை'யைக் கேட்டு ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளோர் துணுக்குற்றனர்! இந்நிலையில் காமராஜர் விழிப்புணர்ச்சியும், சென்னை அரசினரின் 'விசாரணை' ஆர்வமும், கலவரத்தை அடக்க உதவிய அதிகாரிகள் மீது திரும்பியிருக்கின்றன. பெரியகுளம் சப்-மாஜிஸ்திரேட், மற்றும் போலீஸ் அதிகாரிகள் மூவரை வேலையினின்றும் நீக்கியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 35 பேரைத் தவிர, மற்றவர்கள் மீது வழக்குத் தொடருவது அவசியமில்லையென முடிவு செய்துவிட்டார்கள். மீதமுள்ள விசாரணை எப்படி முடியுமென்று நாம் கூறவேண்டியதில்லை. டில்லி பார்லிமெண்டில் நேரு பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தும் வகையில் திருத்தம் கொண்டுவந்து நாட்கள் அதிகம் ஆகிவிடவில்லை. அதற்குள் அவருடைய 'சிஷ்யர்கள்' இங்கே 'கற்போர்' மூலம் பேச்சுரிமையைக் கட்டுப்படுத்த முன்வந்திருக்கிறார்கள். இந்தப் போக்கு நீடிக்காமல் பார்ப்பது 'நல்லாட்சி' நிறுவ எண்ணும் பெரியவர்களின் கடமையாகுமென்று அறிவுறுத்த விரும்புகிறோம்.

காலமும் கருத்தும்

பெங்களூர்

நோய்வாய்ப்பட்டிருந்த காங்கிரஸ் பெங்களூர்க் காற்றால் குணமாகிவிட்டதாகக் காங்கிரஸ் பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன. 'காங்கிரஸ் பிளவுபட்டு விடும்; சின்னாபின்னமாகி விடும்' என்று கனவு கண்டவர்கள் ஏமாந்தார்கள் என்று காங்கிரஸ் காரர்கள் பூரிக்கிறார்கள். இந்தப் பூரிப்பும் ஆர்வமும் நகைப்புக்கிடமானவை என்றுசொல்லவேண்டியதே இல்லை. பிரிந்து போனவர்களையெல்லாம் வரவழைக்கத்தான் பெங்களூர்க் கூட்டம் கூடுகிறதென்றும்; லஞ்சம், ஊழல், சுயநலம், இவற்றைக் காங்கிரஸ்காரர்கள் பெங்களூரில் ஒழித்துக் கட்டிவிடுவார்களென்றும், காங்கிரஸ் குறைகூற முடியாதபடி பத்தரைமாற்றுத் தங்கமாகிவிடுமென்றும், பெங்களூர் அ. இ. கா க. கூட்டம் பற்றிப் பத்தி பத்தியாக அளந்தார்கள். கூட்டம் முடிந்து பார்த்தால் ஒரு மாறுதலும் இல்லை; போனவர்கள் யாரும் வரவில்லை; ஆனால் தங்கியிருந்த கித்வாய், ஜெயின் முதலியவர்கள் வெளியேறியதுதான் மிச்சம் என்றாகியிருக்கிறது. காங்கிரஸ் காரியக் கமிட்டியையும் தேர்தல் கமிட்டியையும் மாற்றியமைக்க வேண்டுமென்று நேரு விரும்பியது என்ன ஆயிற்றென்று உணர்வோர், பெங்களூரில் காங்கிரஸ் அடைந்த 'மாறுதல்' என்ன என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். காங்கிரஸ், ஸ்தாபன முறைப்படி நேரு கையிலிருந்து படிப்படியாக நழுவிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் பெங்களூர் காட்டிற்று. நேரு, காங்கிரஸைப் பொறுத்தவரையில் செல்லாக் காசாகும் காலம் வெகு தூரத்திலில்லை என்ற உண்மை அங்கேதான் நன்கு வெளிப்பட்டது. நாட்டு மக்களிடம் தங்கள் குற்றங் குறைகளை மறைத்துக்கொள்ளவும், செல்வாக்குப் பெறவும், ஓட்டு வாங்கவும் 'நேரு'வைக் காட்டி வந்த காங்கிரஸ்காரர்கள், இனி எச்சமயத்திலும் அவரைக் கைகழுவத் தயங்கமாட்டார்கள் என்பது நிச்சயம். இதை உணர்ந்து கொள்வோர், பெங்களூர் முடிவுகள் பற்றிப் பூரிக்கவோ புளகாங்கிதமடையவோ முடியாது.

எழுத்துச் சீர்திருத்தம்

சென்னை அரசினர், தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் கமிட்டி செய்த சிபாரிசுகளை ஏற்று அவை நடைமுறையில் வர வேண்டுமென உத்தரவிட்டிருக்கிறார்கள்; மகிழ்ச்சியான செய்தி. சீர்திருத்தம் எந்தத் துறை

யிலும் அவசியம்தான். தமிழ் எழுத்துக்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நெடு நாளாக இருந்துவருகிறது. சில மாறுதல்களை 'விடுதலை' நடைமுறையில் கொண்டுவந்திருப்பதும் கவனிக்கப்படவேண்டியதாகும். அம் மாறுதல்களை யொட்டியே, கமிட்டியின் சிபாரிசுகளும் அமைந்திருக்கின்றன. புரட்சிகரமான சீர்திருத்தமில்லையென்றாலும் ஓரளவு அச்சகம், டைப்ரைட்டர் இத்துறைகளிலும், தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு எளிதாகும் முறையிலும் ஒருமுகமான எழுத்தமைப்பு இச் சீர்திருத்தங்களால் ஏற்பட வசதியாகிறது. பத்திரிகைகள், புத்தக வெளியீட்டாளர்கள், அரசினருடன் ஒத்துழைத்து இச்சீர்திருத்தத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்பதே நம் ஆசை.

பாராட்டுகிறோம்

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக டாக்டர் லட்சுமணசாமி முதலியார் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; மூன்றாவது முறையாக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். கல்வித் துறையில் உறுதியான கொள்கையும், அரசியல்ஆவேசச் சுழல்களில் சிக்காத பெருந்தன்மையும், அவரை இப்பதவியில் நீடித்திருக்கத் தகுதியாளராக்கியிருப்பதில் வியப்பேதுமில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் அவர்தம் ஆட்சிக் காலத்தில், புதிய புதிய திட்டங்களை மேற்கொள்வதோடு, தொழிற் படிப்பு, உயர்தரப் படிப்பு ஆகிய துறைகளைச் சாதாரண மக்களும் எளிதில் அணுகும் துறைகளாக்க முயலவேண்டும். பொதுமக்களுக்கும் கல்வித் துறைக்குமிடையில் எத்தனையோ கட்டுப்பாடுகள் இப்போது குறுக்கிடுகின்றன. துணை வேந்தர் இக் கட்டுப்பாடுகளையெல்லாம் இயலுமளவு போக்கி, கல்வியைத் 'தாராளமாக' வழங்கத் தம்பதவியைப் பயன்படுத்துவாரென நம்புகிறோம்.

இன்பக் குழவி

சென்ற இதழில் 'இன்பக் குழவி' என்றொரு கவிதை வெளியாகி இருக்கிறதல்லவா? அக்கவிதையின் கருத்து தமிழர் ஒழுக்க உணர்வைப் பெரிதும் புண்படுத்துவதாக இருக்கிறதெனப் பல நண்பர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். தமிழர் ஒழுக்கம் 'பகல்' என்றும் 'இரவு' என்றும், பத்திரிகைகளாகவும் புத்தகங்களாகவும் 'நாலணு,' 'எட்டணு' என்று கணக்கு வழக்கின்றி விலையாகிக் கொண்டிருக்கும் இந்நாளில், நம் நண்பர்கள் தம் கடிதங்களில் எடுத்துக்காட்டும் 'உயர் நெறி' இருளில் ஒளியென நம்மைப் பரவசப்படுத்தியது. இனிமேல்,

அத்தகைய கருத்துள்ள கவிதைகள் வெளிவரா என்று அவர்கட்கு உறுதி கூறுவதோடு, தமிழர் ஒழுக்க மேம்பாட்டிற்கும் உயர் பண்புக்கும் நம் 'மரியாதை' என்றும் உண்டு என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

தியாகராயர் கல்லூரி நிதி

வடசென்னை தியாகராயர் கல்லூரி நிதிக்காக இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் முயற்சியால் இசையரங்குகள், நாடகங்கள், நடனங்கள். 10-8-51 முதல் 23-8-51 வரை வண்ணாரப்பேட்டை தியாகராயர் மண்டபத்தில் நடைபெற இருக்கின்றன. இப்பணியில் அறிஞர் அண்ணாத்துரை, கே. ஆர். இராமசாமி, டி. கே. எஸ். சகோதரர்கள், எம். கே. தியாகராஜ பாகவதர், டி. ஆர். மகாலிங்கம், எஸ். டி. சுந்தரம், கே. சாரங்கபாணி முதலியோர் தங்கள் பங்கை ஏற்றுக்கொண்டு 'கலைவிழாவை'ச் சிறப்பிக்க இருக்கின்றனர். பொது மக்கள் தியாகராயர் கல்லூரி வளர்ச்சிக்கு உதவ நல்ல சந்தர்ப்பம் இது. கலைவிழாவில் திரள் திரளாக மக்கள் குழுமினரென்றால் தியாகராயர் கல்லூரி நிதி பெருகுகிறதென்றுதானே பொருள்!

போன்: 2549 தந்தி: "IMAGE"

எங்களிடம்

ஜன்னல் கண்ணாடிகள்
பலநிறக் கண்ணாடிகள்
முகம் பார்க்கும் கண்ணாடிகள்
மூன்றெட்டுப் பலகைகள்
படங்கள், சட்டங்கள்
மேசைக் கண்ணாடிகள்

முதலியன கிடைக்கின்றன.

R. ETHIRAJIAH & SONS

103, DEVARAJA MUDALI STREET, P. T. MADRAS 3.

யாருக்கு உங்கள் வாக்கு?

***தேர்தலில் நிற்க விரும்பும் நண்பரே, கேளும்! குளம் தொட்டு வளம்பெருக்கியும் காடு கொன்று நாடாக்கியும் மாட்சியுடன் ஆட்சி செலுத்திய கரிகால் வளவனைப்பற்றி நீர் அறிவீரா? பண்டு சிறந்திருந்த தமிழகம் இன்று சீரழிந்து நிற்பதை நீர் உணர்வீரா? நீர் வளமும் நிலவளமும் நிரம்பிய தண்டமிழ் நாட்டின் மக்கள் இன்று உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாமல் அல்லற்படுவது உமக்குத் தெரிந்த செய்திதானா? வாழப் பிறந்தவர்கள் வாழ்விழந்து வீழ்ந்து கிடப்பதை நீர் நேரில் பார்த்ததுண்டா? தேர்தல் என்னும் பெருவெள்ளத்தில் திடீரென்று நீர் குதிக்க விரும்புவதேன்? 'வெற்றி கிட்டாமல் வெள்ளத்தோடு போனாலும் கவலையில்லை' என்ற துணிச்சலா? வெற்றிபெற்றால் நாட்டிற்கு உழைக்க நல்லதொரு திட்டமுண்டா? தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் மனமுமுண்டா? 'எவன் எக்கேடு கெட்டால் என்ன? கைநிறைந்த பணம் என் பையினுள்ளே பாய்ந்து கொண்டே இருந்தால் போதும்' என்று சட்டைப் பையை விரிவாக்குவீரோ? மூடக்கொள்கைகளை முறியடிக்க, புராணப் புளுகர்களைப் புரட்டிவிட உம்மிடம் வன்மை உண்டோ? நாம் அண்டுகின்ற இடமெல்லாம் மண்டிக்கிடக்கின்ற சாதிச் சனியனை வீதிதோறும் சென்று விரட்டிடச் சக்தி உண்டோ? பல்வகைச் சுழல்களால் சிதறிக் கிடக்கும் தனித்தமிழ் இனத்தினை ஒன்று திரட்டிட உள்ளம் உண்டோ? தென்னாடு பன்னெடும் காலம் பாரில் சிறக்க, வேதனை தரும் வடக்கினின்றும் அதனை வெட்டி எடுக்கப் போதிய மிடுக்குமுண்டோ? தக்கவிடை தாரீர் நண்ப! இன்றேல் சற்றே விலகி வழிவிடுவீர் மற்றவர்க்கே!

கோ. முத்து
சென்னை

○●○

எவர் தமிழ்நாடு தனிநாடு ஆவதற்கு எவ்விதத் தியாகமும் செய்யத் தயார் என்று உறுதி கூறுகிறாரோ அவருக்கே எனது வாக்கை வழங்குவேன்.

வ. க. சங்கரலிங்கம்
சென்னை

○●○

பாட்டாளி பசிதீர வழி வகுக்க, தொழிலாளர் துயர்நீக்க, எழுத்

••• ரூபாய் மூன்று பரிசு பெற்ற கடிதம்.

கலை விழா

சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழகச் சார்பில், செயின்ட் மேரீஸ் ஹாலில் 29-7-51 ஞாயிறு மாலை 5 மணிக்கு திரு. மு. கருணாநிதி தலைமையில் திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. சொற்பொழிவாற்றுவார்.

நுழைவுக் கட்டணம் அணா 8.

துரிமை பேச்சுரிமை வாங்கித்தர யார் தயங்க மாட்டார்களோ அவர்களுக்கே என் வாக்கு; ஆனால் அது காங்கிரஸாக மட்டும் இருக்காது; இருக்கவும் முடியாது.

ஏ. முகம்மது யூசுப்
நத்தம் அபிராமம்

○●○

நாட்டை நாடாக மதித்து, மக்களை மக்களாகக் கருதி, உரிமையை உறுதிப்படுத்தி—சுரண்டல், லஞ்சம், கள்ள வாணிபம், பந்துமித்திரர்களுக்குப் பர்மிட் வாங்குதல், பதுக்கல் வேலை செய்தல், இன்ன பிற ஊழல்களுக்கு இடமளிக்காது, சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் மாற்றுக் கட்சிகளுக்கு ஆதரவு தராவிட்டாலும் தொல்லை தராமல் ஆட்சி முறையை அமைக்க முற்படும் அபேட்சகர் யாரோ அவருக்கே என் வாக்கு...

புவனை-கலைச்செழியன்
கீரப்பாளையம்

கல்வியற்ற நமது நாட்டிலே நடக்கும் தேர்தல் ஒரு சூதாட்டம்; தேர்தலுக்குப் போட்டியிடும் கட்சிகளோ நயவஞ்சகர்களின் கூட்டுப் பண்ணை. தேர்தல் என்று சொன்னவுடன் காளான்கள் மாதிரிப் பல கட்சிகள் முளைக்க ஆரம்பித்துவிட்டன. எனவே, கட்சிகளின் மயக்கு மொழிகளில் மயங்காமல், தேர்தலில் நிற்கும், மக்கள் நலம் நாடும் அபேட்சகர், கட்சிச் சார்பற்றவரானால் அவருக்கே நம் வாக்கு வழங்கப்படல்வேண்டும்.

சி. அ. வரதராஜன்
வாலாஜா

○●○

'உங்கள் ஓட்டு யாருக்கு?' என்ற கேள்வியை நான் ஒருவரிடம் கேட்டபோது அவர் 'எங்கள் கட்சியின் சார்பில் ஒரு கழுதையை நிறுத்தினாலும் நான் அதற்குத்தான் என் ஓட்டைப் போடுவேன்' என்றார். இந்த மனப்பான்மை—அதாவது, 'கட்சிக்காக வாக்கு; தனி மனிதனின் தன்மைக்காகவும் செயலுக்காகவும் அல்ல' என்ற கொள்கை மக்கள் மனதை விட்டு மாற வேண்டும். தேர்தலுக்கு அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும்போது அவருடைய கட்சியைக் கவனிக்கக் கூடாது. அவருடைய யோக்கியதாம்சங்கள் என்ன, மக்களுக்குச் சேவை செய்யும் ஆற்றல்

அவருக்குண்டா என்பவற்றையே ஆராயவேண்டும். அந்த முறையில் தகுதியானவர் என்ருல், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அவரைத் தேர்ந்தெடுத்துவிடவேண்டும்.

"மாது"
சுந்தரம்பள்ளி

○●○

வயது வந்தோர் உரிமையின் எல்லையைக் காண ஒரு வாய்ப்பு, வரும் பொதுத் தேர்தல். அத்தேர்தல் மனித இதயம் படைத்த அனைவருடைய உள்ளங்களிலும் புயலைக் கிளப்பத் தவறவில்லை. ஓரளவுக்கு உலகத்தை உணரத் துடிக்கும் என்போன்ற இளைஞர்கள், உள்ள உரமும், நேர்மைத் திறனும், இன உணர்ச்சியும் மொழிப் பற்றும், நாட்டுப் பிரிவினையிலே எல்லையற்ற ஆர்வமும் கொண்டு சுயேச்சை வாதிகளாக நிற்கும் குணாளர்களுக்கே வாக்கையளிக்க உறுதி கொண்டு விட்டார்கள். அரசாங்கம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தது. எனவே காங்கிரசுக்கே மக்களின் வாக்கு என்ற மிரட்டல் கொள்கையைக் கடைப்பிடிக்கக்கூடாது. தொழிற்சாலைகள், நிலையங்கள், ஆகியவைகளில் பணியாற்றும் அலுவலாளர்கள், தொழிலாளத் தோழர்கள் முதலாளிக்கோ, அதிகாரிகளுக்கோ அடங்கி உரிமையை இழக்கும் நிலையை அரசாங்கத்தார் தலையிட்டுத் தவிர்க்க வேண்டும்.

மு. காணிமுத்து
பூளைமேடு

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்
சிலோன் ஏஜண்ட்:
NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

மறுமலர்ச்சி

சி. திருநாவுக்கரசு

"வெந்தணலாய் உன்பிரிவை எண்ணி, உள்ளம்
வேகின்ற செய்தியினைச் சொல்லி, உன்றன்
செந்தமிழாம் இதழினிப்பு வேண்டி, நாளும்
சிறிதுறக்கம் கொள்ளாத என்னி லைக்கு —
மந்திரமும் மருந்தொன்றும் இல்லா தென்றன்
மனப்பிணிக்கு — மாற்றளிக்கும் உன்பி ணைப்பைத்
தந்துதவ வேண்டுகிறேன், தமிழணங்கே!
தடை சொல்லல் நன்றில்லை பேதங் காட்டி!"

என்றெழுதிச் செம்பரிதி மேற்கு வானில்
எழில் வண்ணந் தீட்டுவதைக் கண்ட வாறே
சென்றிட்டான் சோலைவழி மருத முத்து;
தென்றலிடை, மலர்ச்சிரிப்பில் தெரியும் அன்னாள்
அன்றலர்ந்த மலர் முகத்தின் சாயல் கண்டு
நின்றிருந்த அந்நேரம் மங்கை நல்லாள்
என்றும் போல் குடமேந்தி நீரெ டுக்க
மெலநடந்து தன்னெதிரே வருதல் கண்டான்!

தித்திக்கும் தேன் கூடாய் அவள்ந டந்த
திசையினையே பார்த்திருந்தான்; சிந்தை செல்லும்
அத்திக்கில் கால்விரைய அவள்முன் சென்றான்;
"அன்பே! இக் கடிதமுனக் கெ"ன்று காதல்
வித்திட்ட அவள் கரத்தி விட்டு, மீண்டும்
விரைந்திட்டாங் கருகிருந்த மலர்க்கொத் தொன்றைப்
பிய்த்திட்டான்; பின்னலிடைச் செருகி நின்றான்;
பிரித்தவளும் படித்திட்டுப் பேசலுற்றாள்:—

"அளவிறந்த அன்புடையீர்! என் நிலையை
அறியாது வரைந்திட்டீர்! பின்னும் இந்தக்
களவொழுக்கம் பெருங்கேடாய் முடிதல் எல்லாம்
கண்டுள்ளேன்; கதை பலவும் உண்டு கண்டீர்!

பிளவிந்த வாழ்க்கையிலே உண்டாம்; இந்தப்
பேதையினை மறந்திடுங்கள்" என்றாள்; "வாழ்வின்
அளவறிந்த என்னன்பே! என்ன கத்தில்
எழுந்துள்ள காதல்அள வறிந்தாய் இல்லை!

"மேலாடை அணிந்தக்கால் விதவை என்னும்
மீட்சியிலாப் பெருந்துன்ப வலையில் சிக்கிப்
பாலான இளமையினைப் பாழ்ப டுத்திப்
பய னொன்றும் காணாது போக எண்ணி
ஏலாதிக் களவொழுக்கம் என்றி யம்பி
என் மனதைப் புண்ணாக்க ஏன்து ணிந்தாய்?
வேலாகி எனை வாட்டும் மாலை நேரம்!
வேல்விழியோ எனைவருத்தும் ஓய்வே இன்றி!

"சாதிஎலாம் பெருங்காற்றில் சுழன்றலையும்
சருகாயிற் றிந்நாளில்! சமவாழ் வொன்றே
மேதினியில் இடம்பெற, நாம் மகிழ்வு றும்நாள்
மிகதூரத் தில்லை! இதை உணர்ந்திட் டின்னும்
வேதனையை வார்த்தைகளால் அள்ளி வீச
விரும்பியதும் என்னென்பேன்? இன்க ரும்பே!
சேதியினைப் பழமாகச் செப்"பென் றான்; புன்
சிரிப்பொன்றை உதிர்த்திட்டாள் இளமைச் செல்வி!

"வேளையிது; தென்றலினை உள்வி டாது
விரைந்தணைக்க வா"வென்னும் இதழி ரண்டாம்
பாளையிலே வடிகின்ற மதுவை நன்றே
பருகிட்டான்; பருவம் எனும் செந்தீ, அந்த
நாள்தொடர்ந்து நம்மிடையே உலவு கின்ற
நலமில்லாப் பேதமெலாம் தீய்த்தொ ழித்து
நீள்இன்ப வெள்ளமழை பொழிதல் கண்டார்
நினைவகன்று நீங்காத அணைப்பி ருந்தார்! . . . . . .



வெறும் கலாட்டா

பொதுவாக எந்தச் 'சுல்தான்' ஹோட்டலை எடுத்துக் கொண்டாலும் சால்னா சாஹிபுவின் சர்வாதிகாரம் இல்லாமலிருக்காது. 'குஸ்கா'விலிருந்து கோழி பிரியாணி வரைக்கும் சால்னா அயிட்டம் சம்பூர்ணமாக நிறைந்திருக்கும். சாதாரணமாக இந்த ஹோட்டல்களில் நுழைந்துவிட்டு, சால்னா அஸாத்தின் கிருபா கடாட்சம் இல்லாமற் போய்விட்டால் நாக்கைச் 'சும்மா' நனைத்துக் கொண்டு வரவேண்டியதுதான்.

வடை சால்னா, புரோட்டா சால்னா, சப்பாத்தி சால்னா, கோலா சால்னா......இவையெல்லாம் அறுசுவையல்ல, சால்னாச் சாம்பியன்களின் நாவிற்கு ஆயிரம் விதமான சுவைகளைப் பரப்பும் ஸ்பெஷல் அயிட்டங்களாக்கும்!

ஏன், நமது 'அவாள்' ஹோட்டல்களைத்தான் எடுத்துக்கொள்ளுங்களேன்! இங்கு சாம்பார்ப் பொய்கையில் இட்லிப் படகுகள் மிதக்கும். வடைத் தோணிகள் வரும்; போண்டா 'ஸ்டீம் போட்'கள் போகும். அங்கே சால்னா ஓசை! இங்கோ சாம்பார்க் கூச்சல்! அங்கே சால்னாவின் ஜல்சா! இங்கே சாம்பார்க் கச்சேரி!

அவ்வளவுதான்! மற்றப்படி ஜனாப்களுக்கும் ஸ்ரீமான்களுக்கும் ஒரே மாதிரி நாக்குத்தான்! இந்த நாக்குத்தான் பல போஸ்களில் நடனமாடுகிறது. சாம்பாரை ருசிபார்க்கும் நாவரசர்கள் சால்னாவையும் பதம் பார்க்க ஆசைப்படுகிறார்கள். இவர்கள் சாம்பாரையும் சால்னாவையும் 'மியூச்சுவல்' இடமாற்றம் செய்து எச்சிலை விழுங்கிக் கொள்கிறார்கள்.

உண்மையில் சால்னா என்றால் குழம்பு என்றுதான் அர்த்தம். சாம்பார் மட்டும் என்னவாம்? அதுவும் குழம்புதானே! எனவே சால்னாவும் சாம்பாரும் ஒன்று! ஆஹா...... என்ன ஒற்றுமை!!

இப்படி ஒருவர் (அவர் சாம்பார்த் தாசரோ அல்லது சால்னாக் குலாமோ எனக்குத் தெரியாது) எண்ணிக்கொண்டு சாம்பார் இருக்கவேண்டிய இடத்திலே சால்னாவை வைத்து அழகுபார்த்தார். சால்னா இருந்த இடத்திலே சாம்பாரை வைத்து அழகுபார்த்தார். அவர் கற்பனையிலே இடி! எண்ணங்களிலே மின்னல்!! அதன் பயன்? இட்லி சால்னா, புரோட்டா சாம்பார் — சால்னாப் போண்டோ, சாம்பார்ப் பிரியாணி... ஆஹ்ஹா!

என்ன ருஜி... என்ன ருஜி... ச்சூ !!

சாம்பார், சால்னு அவதாரம் எடுத்தால், சாம்பார் சால்னுவுக் குள்ளே கூடுவிட்டுக் கூடுபாயும் என்கிருர். என்னதான் சால்னுவும் சாம்பாரும் ஒரே 'குழம்பாக' இருந்தாலும் அதற்குள்ள குண வேறுபாடுகளை மறைக்க முடியுமா? சாம்பாரிலும் சால்னுவிலும் குளித்து முழுகும் ஒரே நாக்கு இரண்டுக்குமுள்ள குண வேறுபாடுகளைச் சுரீரென்று சொல்லிவிடாதா? ஜில்ஜில் சாம்பாருக்கும் குடமிளகாய்க் கூட்டுக்குமுள்ள வித்தியாசங்கூடவா தெரியாது! இனிமேலும் யாராவது இப்படியொரு கற்பனையைக் கிளப்பிவிட்டால் நிச்சயம் வயிறு 'வலிக்கச்' சிரிக்க வேண்டியதுதான்! வேறென்ன?

○

புதுமைப்பித்தனைப்பற்றிச் சொல்லிக்கொண்டுவரும் பொழுது ஒரு அன்பர் இப்படி எழுதுகிருர் :

"புதுமைப்பித்தன் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்திருந்தால் இராமாயணத்தைப் பாடியிருப்பார். கம்பர் இப்பொழுது பிறந்திருந்தால் புதுமைப்பித்தனைப் போலச் சிறுகதைகள் பல தீட்டியிருப்பார். இவ்வாறு கம்பருக்கும் புதுமைப்பித்தனுக்கும் ஒரு முடிச்சுப்போட்டு வயிறு குலுங்கச் சிரித்தாராம் இலக்கிய நண்பரொருவர்."

தோற்றம்

பாகனேரி திரு பெரி. அழ. மு. நா. நாராயணன் அவர்களின் துணைவியார் 7-7-51 அன்று ஒரு பெண் மகவுக்கு அன்னையானர் என்றசெய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம். குழந்தைக்கு நம் வாழ்த்து.

யாருக்கும் இதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனல் ஒன்று!

புதுமைப்பித்தன் இருபதாம் நூற்றாண்டிலே பிறந்தார்! கதைகள் எழுதினர்! அதனல் செத்துப்போனர்! அவர் பனிரெண்டாம் நூற்றாண்டிலே பிறந்து, கவிதைகள் எழுதியிருந்தால் சுந்தராமாயணத்தொண்டர்கள் அப்பொழுதே அவரைத் தூக்கிலே போட்டிருப்பார்கள்.

கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே பிறந்தார்! இராமாயணத்தைப் பாடினர்! நன்றாக வாழ்ந்தார். அவர் இருபதாம் நூற்றாண்டிலே பிறந்து கதைகள் எழுதியிருந்தால் புதுமைப்பித்தனைப் போலச் செத்துப் போயிருக்கமாட்டார்! அவரது மனைவி, மக்கள் நிதிகோரும் நிலைக்கும் வந்திருக்கமாட்டார்கள்! கல்லுப்போல இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பார் என்பது மட்டும் நிச்சயம்!

— கில்லாடி.

ரூபாய் 100 பரிசு!

'ஜெகசிற்பியன்' எழுதிய 'படுக்கை அறை'யைப் படியுங்கள். படித்து முடித்ததும் உங்களின் உண்மையான அபிப்பிராயத்தை 15 வரிக்குள் எழுதி "வெண்ணிலா வெளியீடு-தபால் பெட்டி 1793 சென்னை-1" என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த அபிப்பிராயத்துக்கு ரூ. 100 பரிசு தரப்படும். பரிசு பெற்றவரின் விபரம் 15-10-51 தினமணியில் வெளியிடப்படும்.

— நிர்வாகி.

மகத்தான வரவேற்புடன் விற்பனையாகிறது!

உங்கள் பிரதிக்கு முந்திக்கொள்ள வேண்டாமா?

மணமக்களுக்குப் பரிசு தரவேண்டிய மகத்தான இலக்கியப் பொக்கிஷம்.

தமிழ் மக்களின் நெஞ்சத்தில்
தனியிடம் பெற்றுவிட்ட

'ஜெகசிற்பியன்' எழுதிய

படுக்கை அறை

(பவுன் பரிசு பெற்ற நாவல்)

உள்ளத்தைக் கிள்ளி உணர்ச்சிக்கு உயிர் ஊட்டும் ஒப்பற்ற நாவல்!
கண்ணைப் பறிக்கும் மூவர்ண அட்டை.
கவர்ச்சி மிகுந்த புத்தக அமைப்பு!

விலை ஒரு ரூபாய்.

எல்லா ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்

தபாலில் பெற ரூபாய் ஒன்று அனுப்ப வேண்டும்.
தபால் செலவு இனம்.

ஏஜண்டுகள் 25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பியோ அல்லது வி. பி. பி. யிலோ பெற்றுக்கொள்ள வேண்டும்.

விவரங்களுக்கு:

வெண்ணிலா வெளியீடு

118, பிராட்வே :: சென்னை-1.

எங்கள் புது வெளியீடுகள்! உயர்தரமான நாவல்கள்!

1. அழகி **2. அபவாதம்**

ஒவ்வொன்றும் விலை 8 அணா.

ஆசைக் கனல்

எஸ். ஆறுமுகம்

உச்சி வேளை!

படை பதைக்கும் வெய்யில்; கண்மண் தெரியாமல் பேய்க் கூத்தாடும் சூறைக்காற்று!

சாவிற்குத் தப்பி வந்தவள் போலத் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று மருண்டோடி வந்து நின்றாள் தெய்வானை. ஏதோ ஓர்விதமான அமைதி பூத்து நின்றது அவள் மனசில். நெஞ்சில் கையை வைத்துப் பார்த்தாள். 'டக்—டக்' சப்தம் அவ்வளவாக இல்லைதான்.

'ஆத்தாடி, என்ன வெய்யில்? என்ன காத்து?'

அவள் பெருமூச்சு விட்டாள். கண் பார்வை மங்கியிருந்தது; உள்ளங்கையால் கண்களைக்கசக்கி விட்டு நன்றாகப் பார்த்தாள்.

நுங்கும் நுரையுமாகப் பொன்னியில் புது வெள்ளம் சுழித்தோடிக் கொண்டிருந்தது. கரையோரத்தில் வந்து நின்ற அவள் ஒருமுறை ஆற்றைச் சுற்றிப்பார்த்தாள். நடந்துவந்த களைப்புத் தீர மரத்து நிழலில் ஒதுங்கினாள்; பிறகு மெதுவாக நடந்து போய் நாலு வாய்த் தண்ணீரை அள்ளிப் பருகினாள். பசி வயிற்றைக் குடைந்தெடுத்தது.

தன்னைப்பற்றி ஒரு கணநேரம் தெய்வானை சிந்திக்கலானாள்.

"கிலந்தெளியிற நேரத்துக்கு வீட்டை விட்டுக் கிளம்பினவ; நடந்ததிலேயே பாதிப் பொழுது ஓடியிருச்சு; வீட்டை விட்டு ஓடியாந்தது ஆயாவுக்குக்கூடத் தெரியாதே. பத்து மாசம் சுமந்து பெற்ற வயிறு என்ன பாடு படுமோ? ஆனா அப்பாரு—அப்பனா அது? அவரு அக்கா மகனாம்—அந்த உறமுறைக்காவ நாடோடி ஆளுக்கு நான் பெண் சாதி ஆகணுமாக்கும்? அவரு பாத்து வச்சிருக்கிற மன்மதன் யாருன்னு கூடத் தெரியாதே. ஊம்; போனதை நெனைச்சு என்ன ஆகப்போவுது? அசலூருக்குப் போயி வேலை செஞ்சு பிழைக்கவேண்டியதுதான். ஆ... பாலே விட்ட வழி..."

பொறி தட்டும் அளவில் நிரம்பி வழியுமே காட்டாற்று வெள்ளம், அதைப் போல தெய்வானையின் கருமணிகள் இரண்டும் கண்கள் வடித்த கண்ணீர் வெள்ளத்தில் அமிழ்ந்து விட்டன. அவள் இளம் நெஞ்சம் நெருப்பாகத் தகித்தது.

கடந்த இரண்டு நாட்களாக வீட்டில் நடந்த சம்பவங்களை ஒன்றுகூட்டி நினைத்துப் பார்த்தாள் அவள்.

தெய்வானை அந்த வட்டாரத்தில் ஒரு வடிவழகி. காட்டுமலர். மலர் என்றால் வண்டினத்தின் நாட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? தெய்வானையை 'ஆசைக் கண்ணாட்டி'யாக்கிக் கொள்வதில் எத்தனையோ இள வட்டங்கள் 'நான்—நீ' என்று போட்டியிட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவள் தகப்பன் வேலப்பனது முடிவு அன்று வெளிடப்பட்டதும் இளசுகள் அத்தனையும் மூச்சுக் காட்டாமல் வந்தவழியே நழுவிவிட்டார்கள்.

அந்த முடிவு! தெய்வானையைத் தன் தமக்கை மகனுக்கு கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுக்கொண்டிருந்தான் வேலப்பன். இவ்விஷயத்தை அவன் கூறியபோது தெய்வானை ஒருவித நாணத்துடன் உள்ளே நலியாமல் ஓடிப்போனாள். பிரஸ்தாபித்த நாயகனைப்பற்றிய இன்ப நினைவில் மனசை இழையோடவிட்ட அவள் அதே நிமிஷத்தில் அந்த 'ஆசை முகத்தை'ப்பற்றிச் சிந்தித்தாள். ஆனால் அவள் மனத் திரையில் எந்த 'நினைவு முக'மும் நிழலாடவில்லை. ஆம்; அவள் அப்பன் கூறிய அந்த 'மச்சான்' பிள்ளைப்பிராயம் முதலாகவே அக்கரைச் சீமையிலிருந்தவன். மேலும் சில நாள் பின்னரே சொந்தக் கிராமத்துக்கு மீண்டும் வந்திருந்தான். அவனைத் தெய்வானை ஒருதரம்கூடப் பார்த்தது கிடையாது. அதனால் அவனைப்பற்றி எவ்விதத் தகவலும் தெரிந்திருக்க நியாயமில்லைதானே?

வாழ்க்கையில் நினைப்பதற்கும் நடப்பதற்கும் ஏனோ தொடர்பற்று மாறாகவே அமைந்துவிடுகின்றது!

ஒருநாள்! அந்தி சாயும் நேரம்!—

தெய்வானை கிணற்றிலிருந்து தண்ணீர்க் குடத்துடன் கைகளை வீசியவாறு நடந்து வந்துகொண்டிருந்தாள். அப்போதுகூட அவள் வரப்போகும் எதிர்கால நாயகனைப்பற்றிய இன்ப நினைப்பிலேதான் திளைத்துவிட்டிருந்தாள். ஆனால்...

அவளை வரவேற்பவளைப் போல முன்வந்து நின்ற பூவாயியைக் கண்ட தெய்வானை "பூவாயி" என்றாள்.

"தெய்வானை, ஒனக்குக் கண்ணாலமாமே, எங்கிட்டக் கூடச் சொல்லக்கூடாதா?"

"நீதான் எல்லாத்தையும் தெரிஞ்சி வச்சிருக்கியே!"

"வடக்குத் தெரு வள்ளி சொல்லாட்டி எனக்கெங்கே தெரியப்போவுது! சரி, மாப்பிள்ளை யாருடி அம்மா?"

"கண்டிச் சீமையிலேருந்து வந்திருக்காருல்ல..."

"யாரு, சோமு மச்சானா?"

"ஆமா!" "ஒன் தங்கமான கொணத்துக்கு..."

முக்கியமான கட்டத்தில் சினிமாப் படம் அறுந்துவிட்டால் பார்ப்பவர்கள் மனசு எவ்வளவு வேதனைப்படும்? அதைப்போலத்தான் தெய்வானையும் துடிதுடித்துப் போனாள். பூவாயி மீண்டும் தொடர்ந்தாள்.

"தெய்வானை, நீ எனக்கு உசிருக்குசரு. என் காதிலே எட்டினதை ஒங்கிட்டே சொல்லாமலிருக்க முடியுமா? ஒன் அப்பாரு பார்த்திருக்கிற மாப்பிள்ளை பெரிய காலியாம், நாடோடியாம், அக்கரைச் சீமையிலே செகப்புத் தொப்பிக்காரங்களுக்கெல்லாம் எப்பவும் இவரு மேலே ஒரு நோட்டமாம்! காதும் காதும் வச்ச மாதிரி ஒரு ஆளு இதைச் சொன்னான்."

அவ்வளவுதான்; கிறுக்குப் பிடித்தவளைப்போல ஓடினாள் தெய்வானை; அந்த மச்சானைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாதென்று கண்டிப்பாகத் தகப்பனிடம் சொல்லிவிட்டாள்.

"என்ன, முடியாதாங்காட்டி" என்றான் வேலப்பன்.

"ஆமா; காலிப் பயலின்னு ஊரெல்லாம் பேசுது. அந்த மனுசனைக் கட்டிக்கிட என்னாலே முடியாது" என்றாள் தெய்வானை அழுத்தந் திருத்தமாக.

"ஏலே, யாரு காலி? என் அக்கா மவனா காலி? ராஜாவாட்டமாயிருக்கிறான்! அவனைக் கண்ணாலம் பண்ணிக்க அதிருஷ்டம் வேணுமா? அதிர்ஷ்டமாவது, மண்ணாவது? ஊம், கவுண்டன் திட்டம் போட்டாப் போட்டதுதான். செல்லி, உன் மகள் கிட்டே சொல்லிப்போடு. வார கௌமைக்குப் பரிசம் போடணும். மாப்பிள்ளை அதே காலிப் பயல்தான். தெய்வானைக்குச் சொல்லு. ஆமா; அப்புறம் பெத்த மகளாச்சேன்னுகூடப் பார்க்கமாட்டேன். அது தலையைக் கொடுவாளுக்குப் பலி கொடுத்திடுவேன்" என்று கர்ஜித்தான் வேலப்பக் கவுண்டன். பக்கத்தில் நின்ற அவன் மனைவியின் மூளை கலங்கியது.

தகப்பனின் இறுதி மொழிகளை—திட்டவட்டமான தீர்ப்பை நினைத்துப் பார்த்த தெய்வானை 'ஐயோ' என்று அலறினாள்.

உள்ளக் கடலில் ஆர்ப்பரித்த நினைவு அலைகள் ஓய்ந்தவுடன், சுய நினைவு வரப்பெற்றாள் தெய்வானை; நீர் நிறைந்த கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள்.

அதே சமயம் ஆற்று வெள்ளத்தைப் பிளந்துகொண்டு 'ஐயோ' என்ற சத்தம் வெடித்துக் கிளம்பி அவள் காதுகளில் எதிரொலித்தது.

திடுக்கிட்டுத் திரும்பினாள். கரையை நோக்கிக் கூற்றுப்போல் ஆற்றோடு ஒரு உருவம் மிதந்து வந்துகொண்டிருந்தது! என்ன தோன்றியதோ, சட்டென்று தெய்வானையும் ஆற்றினுள் குதிக்க அடியெடுத்து வைத்தாள். வைத்தவள் ஒருகணம் அவ்வுருவத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்த உருவத்தின் கம்பீரமான அழகிய முகத்தைக் கண்டு அப்படியே நின்றுவிட்டாள்.

அவளோ கன்னிப் பெண். உலகமறியாதவள். ஆனால் உலகம் அறியவேண்டியவள். சந்தர்ப்பத்துக்குக் காத்திருக்கிறாள். அவன் யாரோ? முன்பின் தெரி

யாத அந்த இளைஞனை எப்படிக் காப்பாற்றுவது?

எண்ணங்கள் சுழன்றன. மறு கணமும் அந்த முகத்தை நோக்கினாள்; அதில் கலவரமும் பயமும் பூசியிருந்தன. மனம் இளகியது. அவள் திடம் பெற்றாள்.

மேல் சேலையை இடுப்பைச் சுற்றி வரிந்துகொண்டு, தன் கைகளை நீட்டி ஆபத்துக்கு உதவ முன்வந்தாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது.

அடுத்த சில வினாடிகளில் அவன் கரை சேர்க்கப்பட்டான். தன்முன் உயிர் பெற்று நிற்கும் அந்தக் கம்பீர உருவத்தைக் கண்டவுடன் தெய்வானைக்கு மெய்சிலிர்த்தது. அவளுடைய கண் இமைகள் சிட்டுக்குருவியைப் போலச் சிறகடித்தன.

அவள் அவனைப் பார்த்தாள்; அவனும் அவளைப் பார்த்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தார்கள்; பார்த்துக் கொண்டே இருந்தார்கள். பேச்சில்லை; ஆம், கண்கள்தாம் பேசுகின்றனவே. அவள் காந்தம். அவனோ இரும்பு; காந்தமும் இரும்பும் ஒன்றையொன்று இழுத்துக்கொண்டன. வேறு என்ன வேண்டும்?

"மச்சான்."

அவள் குரல் குயிலைப்போல ஒலித்தது.

"ஆமா; இந்த மச்சான் எம்பிட்டு அழகா, நல்லவரா இருக்காரு. எம் மனசு இவரைக் கண்டதும் எப்படி அவருகிட்டே லயிச்சிருச்சு. இவரையே கண்ணாலம் செஞ்சுக்கிட்டா..."

தெய்வானையின் ஆசை இன்ப வலை பின்னியது.

தெப்பமாக நனைந்து நின்ற அந்த இளைஞன் அரைக் கணத்தில் வேட்டியைப் பிழிந்து கட்டிக் கொண்டான். இன்னும் அவன் மௌனமாகவே இருந்தான்.

"மச்சான், பேசமாட்டிங்களா?"

வலுவில் அழைத்துப் பேச எத்தனிக்கும் அவளது போக்கை மனத்திற்குள்ளாகவே எண்ணிச் சிரித்துக்கொண்டான் அவன்.

"ஒன் பேரு தெரிஞ்சாத் தானே நானும் பதிலுக்குப் பேசலாம்."

அவன் வாய் பேசியது; கண்களும் பேசின.

உதட்டைப் பிரித்து மெல்லத் தலை தூக்கியிருந்த பற்களிடையே தன் தளிர் விரலை லாவகமாகத் திணித்த வண்ணம், புன்னகை பூத்தாள் அவள்.

"ஏதேது, பெரிய கிண்டல்கார ஆளுதான் போலே."

வரிந்து கட்டியிருந்த சேலையைத் தளர்த்திவிட்டு, கூந்தலை அவிழ்த்துக் 'கொண்டை' போட்டுக்கொண்ட அவளது கொள்ளை வனப்பில் பேதலித்தான் இளைஞன்.

"அது சரி, ஒன் பேருதான் என்ன?"

"தெய்வானை."

அவன் உதட்டோரத்தில் விஷமப் புன்னகை சொக்கி நின்றது.

"தெய்வானை, ஊம்; நல்லாத்தான் இருக்கு; வயசுப் பொண்ணு இம்மா வேளையிலே எங்கே பயணப்பட்டே? நீ எந்த ஊரு?" என்று மறுபடியும் கேள்விகளை அடுக்கினான்.

தெய்வானை விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே தன் 'கதை'யைச் சொன்னாள்.

"தெய்வானை, அந்த ஊர் சுற்றியைக் கட்டிக்க மனசில்லாம ஓடி வந்திட்டியா? ஆனா யோசிக்கிறப்ப நானும் ஒரு ஊர் சுற்றி தானே. என்னை..." என்று நிறுத்தினான் அவன்.

"மச்சான், விளையாட்டு அப்புறம் ஆகட்டும். ஒங்களைக் கண்டதும் என் மனசு எப்படியோ இருக்கு. உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கிடனும்னு மனசு ஒரே குதியாக் குதிக்குது. ஆமா, மறந்தே போயிட்டேன்.. நீங்க எப்படி இந்த ஆத்திலே விளுந்திங்க...ஐயோ..." என்றாள் அந்தப் பட்டிக்காட்டுப் பாவை.

கால் வழுக்கி விழுந்துவிட்டதாகச் சம்பவத்தைக் கூறிய இளைஞன்மீது நிறைய அனுதாபப் பட்டாள் அவள்.

"மச்சான், ஒண்ணு சொல்லுறேன், கோவிச்சுக்கமாட்டிங்களே. நம்ப ரெண்டு பேரும் எங்க வீட்டுக்குப் போய், அப்பாரவைச் சமாதானப்படுத்தி அங்கேயே இருந்திடலாம். நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள் தெய்வானை.

அதே மின்வெட்டின் சுழவில், "என்ன, ஒன் அப்பனைச் சமாதானமா செய்துடுவே, ஊர்ப்பயலோடு ஓடியாந்துட்டு" என்று கூக்குரலிட்டவாறு கண்களில் கனல் பறக்க எதிரே வந்து நின்றான் தெய்வானையின் தந்தை. கவுண்டனைக் கண்ட

அவள். 'வெல வெலத்'துப் போனாள். இளைஞனின் பிடியிலிருந்த அவள் கரங்கள் தானாக நழுவி விழுந்தன.

மறுகணம் "ஒரு பயசுப் பெண்ணை வலை போட்டு ஏமாத்த ஒனக்கு எத்தனை ஆணவம்..." என்று கர்ஜித்தவண்ணம் கையில் சுழன்ற கழியை அந்த யுவன் பக்கம் வீசினான் வேலப்பன். குறி தவறவில்லை. ஆனால் வீசி எறிந்த கழியைக் குறுக்கிட்டு முன்னோடித் தடுத்த தெய்வானையின் நெற்றியை அந்தக் கம்பு தாக்கிற்று.

அதே நேரம் "ஐயோ தெய்வானை" என்று அலறிக்கொண்டு அவள் மூர்ச்சித்து விழுந்த இடத்துக்குப் பாய்ந்தான் அந்த இளைஞன். அவள் நெற்றியிலிருந்து ரத்தம் பெருகியோடியது; தன் வேட்டியால் துடைக்க ஆரம்பித்தான்.

"ஏ, தொடாதே, என் மகளைத் தொட ஒனக்கு யோக்கிதை இல்லை. இந்தாப் பாரு. இந்த வீச்சோடே உன் உசிரையும் வாங்கிப்பிடறேன்" என்று உறுமிக்கொண்டு மறுபடியும் கம்பைக் குறி பார்த்து அந்த இளைஞன்மீது வீசப்போனான் கவுண்டன்.

"ஐயையோ, மாமா..." என்ற எதிரொலி கிளம்பிற்று.

கவுண்டன் தலையை உயர்த்தினான். கைப்பிடியிலிருந்த தடி தரையில் விழுந்தது.

"யாரு, சோமுவா? இந்த நாடகமெல்லாம் என்ன? ஐயோ ஆத்திரத்திலே உன்னைக் கவனிக்கவேயில்லையே! கொஞ்சம் தப்பி நீயும் என்னை அழைக்காட்டி என்ன நடந்திருக்குமோ...?"

"மாமா, தெய்வானையை எனக்குத்தான் கண்ணாலம் செய்யணுமின்னு நீங்க முடிவு சொன்னதுக்கு, ஊரிலே யாரோ கட்டிவிட்ட புரளியைக் கேட்டு அது எனக்கு வாழ்க்கைப்பட மறுத்துப் புறப்பட்டிருச்சு. தூண்டில்காரனுக்கு மிதப்பு மேலேதானே கண்ணு? எல்லாத்தையும் கவனிச்சுக்கிட்டே நானும் அதோடேயே பின்னுக்குத் தொடர்ந்தேன். கடைசியா அது களைச்சு ஆற்றுக் கரையிலே குந்தினதையும் கவனிச்சேன். ஒரு யோசனை ஓடுச்சு. என்னைத்தான் அதுக்கு அடையாளம் தெரியாதே. ஆற்றிலே தவறி விழுந்து அம்பிட்டுக்கிட்டவன் மாதிரி நடிச்சு, அது மனசையும் என் பக்கம் இழுத்துட்டேன். தெய்வானை என்னைக் கண்டதும் உயிரை எம்பேரிலே வச்சிடுச்சு. ஆனா நான்தான் உங்க அக்கா மகன் என்கிறது மட்டும் தெரியாது."

சோமு இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே தெய்வானை குறுக்கிட்டாள்.

"மச்சான், என்னை மன்னியுங்க. உங்களை இதுக்கு முந்தி நான் பார்த்தது கிடையாது. பூவாயி உங்களைப்பத்திச்

சொன்ன அவதூறைக் கேட்டு மோசம் போனேன்."

மேலே ஏதோ கூறவிருந்த தெய்வானையைக் குறுக்கிட்டு, "தெய்வானை, யாரு சொன்னது? பூவாயியா? அதுவா என்னைப் பத்திப் புரளி சொன்னது?" என்று சாமாரியாகக் கேட்டான் சோமு.

அப்பொழுதுதான் அந்த எதிர் பாராத சம்பவம் நடந்தது.

"பாவம், யாரோ ஒரு வயசுப் பொண்ணு ஆத்துச் சுழலிலே அம்பிட்டிருச்சு. இந்தமட்டும் தப்பிச்சதுக்கு அது எவ்வளவு அதிர்ஷ்டம் செஞ்சிருக்க வேணுமோ..." என்று கூறியபடி நாலைந்து பேர்கள் ஒரு பெண்ணைக் கைப்பிடியாகக் கொணர்ந்து மாத்தடியில் கிடத்தினர்கள்.

ஓடிச் சென்ற சோமு அப் பெண்ணைக் கூர்ந்து நோக்கினன். உடனே அவன் அலறிவிட்டான். அவள்தான் பூவாயி; அவனுக்கு அவளும் முறைப் பெண்தான். அவள் அவன்மீது 'காதல்' கொண்டிருந்தாள்.

பூவாயியை இந்நிலையில் பார்க்க நேர்ந்த தெய்வானையும் பிரமித்து விட்டாள்.

லேசாகப் பிரக்ஞை வரவே பூவாயி கண்களைத் திறந்தாள்; தன் மச்சானை அப்படியே விழுங்கிவிடுபவள் போல வெறித்துப் பார்த்தாள்.

"மச்சான், நீங்களும் தெய்வானையும் என்னைப் பெரிய மனசு பண்ணி மன்னியுங்க. உங்களை நானே கட்டிக்கிடவேணுமிங்கிற ஒரே ஆசையிலே உங்களைப்பத்தி இல்லாததும் பொல்லாததுமாத் தெய்வானை கிட்டே சொன்னேன். அதன் பொன்னை மனசைக் கலைச்சுப்புட்டேன். ஆனல் என் ஆசைக் கனல் என்னையே எரித்துவிட்டது. கொஞ்ச முந்தி நீங்க ஆத்திலே திடுமின்னு குதிச்சதைப் பார்த்ததும், உங்களோடேயே பின்னாலே வந்த நானும் தண்ணியிலே குதிச்சுப்பிட்டேன். நீங்க இல்லாம எனக்கு என்ன வாழ்வுன்னுதான் அப்படிச் செய்தேன்."

பூவாயி தேம்பினள். அவள் பார்வை சோமுவின்மீது ஆரோகணித்திருந்தது; தலையைக் குனிந்து மெல்ல அவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தான் சோமு. தன்னிடம் பூவாயி கொண்டிருந்த அந்தரங்கக் காதலை நினைத்துப் பார்த்தான், கருப்பையில் வளர்ச்சியுறும் சிசுவை எண்ணும் தாய்போல.

"மச்சான்,"

"பூவாயி,"

"உங்கள் பக்கத்திலேயே சாகிறேன். உங்களைப் பார்த்துக் கொண்டே சாகிறேன். இது ஒண்ணே என் ஆசையைத் தீர்த்து வைச்ச மாதிரி..." அதற்குப் பிறகு அவள் உதடுகள் அசைவதை நிறுத்திக்கொண்டன. அவள் இதயமும் ஒலிப்பதை நிறுத்திக்கொண்டது.

சோமு நிலைவிழந்தான்!

தமிழ் விருந்து

"தமிழ்த்தும்பி"

7. கண்களின் தவறு

இனிய தமிழ்ப் பாடலின் இன்னிசை காற்றிலே மிதந்து வந்து கதவைத் தட்டியது. மூடியிருந்த கதவு திறக்கப்பட்டது. வீட்டிலிருந்து பளபளக்கும் நீள்விழியாள் ஒருத்தி வெளியே வந்தாள். பாட்டு இன்னும் உணர்ச்சியோடு பாடப்பட்டது. இயற்கையிலேயே இசை இயைந்த பெண் உள்ளம் 'காற்றினிலே வரும்' இசை இன்பத்தை நுகர்ந்தது.

"மேகம் மலையுச்சியைத் தொடுகிறது. நீலக்கடல் வான விளிம்பை எட்டித் தழுவி நிற்கிறது. ஆறு கடலில் கலக்கிறது. இயற்கையில் ஒன்றின்மேல் மற்றொன்றுக்கு எவ்வளவு பற்றுதல்! படைப்பின் அடிப்படையே காதல்; காதலே உலகம்!" என்ற கருத்தமைந்த பாடலைப் பாடினான் பாணன். நீள்விழியாளுக்கு இந்தப் பாட்டு நிம்மதியைக் கொடுத்தது. காதலைப் பற்றிய பாட்டல்லவா? அகன்ற அவளது கண்களில் மின்னலொளி தவழ்ந்தது.

"காதல் மிகுதியை வெளியிட இயற்கையில் எவ்வளவு போட்டி உள்ளது! அன்றில் ஜோடியை அதிகக் காதலுக்கு எடுத்துக் காட்டுவார்கள். அதைவிட அதிகக் காதல் ஒருவரிடம் உள்ளது" என்றான் பாணன்.

மைவிழியாள் கூர்ந்து கேட்டாள். பாணன் சொல்கிறான்:

"இன்று ஒரு அழகன் கண்ணாடியைப் பார்த்தான். அது அவன் இதயப் பரப்பிலே சிரித்துக் கொண்டிருக்கும் அன்புக் காதலியைக் காட்டிற்று. உடனே அந்த அழகன் அவளைக் காணப் புறப்பட்டு விட்டான்."

"பாண! அவ்வளவு உயர்ந்த பண்புடைய தலைவன் யார்?" என்று கேள்விக் குறியை இட்டாள் பளபளக்கும் விழிகளையுடைய அந்தப் பாவை.

"உயர்ந்த பண்புடைய தலைவர் வேறு யாராயிருக்க முடியும்? அவர் இந்த வீட்டுக்கு உரியவர் தானம்மா" என்றான் பாணன்.

அவள் சிரித்தாள். கலகலவென்று சிரித்தாள். கைகொட்டிச் சிரித்தாள். அந்தச் சிரிப்பிலே ஆனந்தமோ மகிழ்ச்சியோ இருக்கவில்லை. ஆனால் கேலியும் கிண்டலும் நிறைந்திருந்தன! சினமும் சீற்றமும் கூடச் சேர்ந்து வந்தன!

பாணன் பிரமித்துப் போய் நின்றுவிட்டான். "பாடினோம்;

பரவசப்பட்டாள்! காதலைப் பற்றிச் சொன்னேம்; கவனித்துக் கேட்டாள்! தலைவனைப் பற்றிச் சொன்னவுடன்...ஏனிந்த மாற்றம்?"—அவன் தடுமாறினன்.

"பாண, உன் கற்பனைக் கவிதைகள் இனிப்பூட்டின. ஆனல் உன் கற்பனைப் பேச்சு கசப்பூட்டுகிறது. குப்பைச்செடியைப் பச்சைக்கொடி என்கிறாய். குண்டுமணியைப் போய்ச் சொக்கத் தங்கம் என்று சொல்லுகிறாய்! காதற் பண்பாடு சிறிதும் அறியாதவரைக் காதலுக்கே இலக்கியமாக்கிக் காட்டி விட்டாய். பாண, காதல் என்பது இன்னும் உயிரோடு இருக்கிறதென்ருல் அது, என் தலைவி உயிரோடிருப்பதால்தான்!"

மடமடவென்று கொட்டிவிட்டாள் அந்தப் பெண். அவள் அந்த வீட்டுத் தலைவியின் தோழி. தலைவன் தலைவியை மறந்துவிட்டுக் காமக்களியாட்டில் ஈடுபட்டு விடுகிருன்! இந்தச் செயல் தலைவியை விடத் தோழிக்கே அதிகத் துன்பம் தந்துவிட்டது போலும்! எனவே தான் தலைவனைப்பற்றிச் சொல்ல வந்த பாணனிடம் பதைபதைக்கின்ருள்.

"அவர் மிகவும் ஒழுக்கமுள்ளவர்; உயர்ந்த காதல் பண்புடையவர்; அவர் இந்நேரம் இங்கே வந்து கொண்டிருப்பார்" என்று மெதுவாகப் பாணன் மீண்டும் தன் கதையை ஆரம்பித்தான்!

"வரட்டுமே! என் தலைவியிடம் சொல்லிக் கதவுக்குத் தாழ்ப்பாளிடச் சொல்லுகிறேன். அவருடைய காதல் வெறும் சதை, நரம்பு, எலும்புக் கூட்டுக்குள் தான் கிடக்கிறதே ஒழிய அவருடைய மனதில் இல்லை. அவரால் என் தலைவி மிகவும் வாடி விட்டாள். இனியும் வாட்டாதே! பாண, நீ போகலாம்." என்று சொல்லிவிட்டுக் கதவைச் சாத்தினள்.

○

ஒளியிழந்த கண்கள்; ஒட்டிப் போன கன்னங்கள்; வாரிவிடப் படாத கூந்தற் சரிவு; வாடிக் கிடக்கும் மேனி; வீட்டுக்குள் ளிருந்த தலைவி தோழியின் 'அட்டை'யைக் கேட்டு மெதுவாக எழுந்து வந்தாள்.

"தோழி, வாசலில் வந்திருப்பவர் யார்?"

"பாடிப் பிழைக்கும் பாணன்; தலைவருக்குத் தங்கள்மீது திடீர் அன்பு ஏற்பட்டு விட்டதாம். ஓடோடியும் வருகிருராம். அதை உரைத்துப் போக வந்திருக்கிருன்."

"அப்படியா? அவரை ஏன் வாசலுக்கு அப்பாலேயே நிறுத்திவிட்டாய்? வீடு தேடி வந்துவிட்டால் அவர் நம் விருந்தினரல்லவா?"

"பொய் சொல்லுவதே பாணர்களின் தொழிலாகிவிட்டதம்மா! அவனுடைய பொய்ப் பேச்சுக்கு

காம் விருந்து வேறு வைக்க வேண்டுமா? காமக்களியாட்டில் ஈடுபட்டுக் கருத்திழந்த தலைவரை அன்றிலுக்கு உவமை சொல்கிறான்! யாரிடம் எதைச் சொல்வதென்றே இவனுக்குத் தெரியவில்லை. தலைவரைப் போலவே இவனுக்கும் அறிவு மழுங்கிவிட்டது."

"தோழி! அவர்மேல் உனக்குச் சீற்றமென்றால் இவன்மேல் ஏன் பொங்குகிறாய்?"

"பின்னே என்ன அம்மா! ஒன்று அவருக்குப் புத்தி இருக்க வேண்டும். அல்லது இவனுக்குப் புத்தி இருக்க வேண்டும். இருவருக்கும் இல்லை. ஆனால் காதல் பெருமையைப் பாட மட்டும் தவறுவதில்லை. நீங்களே சொல்லுங்கள், அம்மா! உயர்ந்த காதலன் உண்மைக் காதலியைக் கனவிலும் மறப்பானா? அப்படியே மறந்துவிட்டால் அவனை உயர்ந்த காதலன் என்று எப்படிச் சொல்லுவது?"

"தோழி! நம்மை மறந்தாரை நாம் மறப்பது ஒன்றும் கடினமான காரியமல்ல. நாம் நினைத்தால் நம்மை அறவே மறந்துவிட்டவரை ஒரே கணத்தில் மறந்துவிடலாம். அது நமக்கு மிகவும் எளிது."

"அப்படிச் சொல்லுங்கள், அம்மா! தலைவர் வீட்டுக்கு வந்தால் தாழ்ப்பாள் போட்டுவிடுங்கள். இல்லையென்றால் நானே போட்டுவிடுகிறேன்."

தலைவி நம் வழியில்தான் இருக்கிறாள் என்று தோழிக்கு ஒரே மகிழ்ச்சி. வெளியே நின்ற பாணனோ ஒன்றும் புரியாமல் 'என்ன தான் முடிவு?' என்பதை அறிந்துகொள்ள நின்று கொண்டிருந்தான். தலைவியின் குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

"தோழி, நாம் அவரை மறந்துவிடலாம். ஆனால்..."

பாணன் மனதிலே நம்பிக்கை ஒளியிட்டது. 'ஒரு ஆனால் போடுகிறாளே? என்ன சொல்லப்போகிறாளோ?' என்று உன்னிப்பாகக் காது கொடுத்துக் கேட்கலானான்.

"ஆனால் என்ன அம்மா? அவரை மறப்பதில் 'ஆனால்' ஏன் வருகிறது?" என்று கேட்டாள் தோழி.

"தோழி! மறந்துவிடலாம். ஆனால் இந்தப் பாழாய்ப்போன கண்கள்தாம் நாம் நினைப்பதைச் செய்ய விடுவதில்லை!"

"என்ன சொல்கிறீர்கள்? புரியவில்லையே?" என்றாள் தோழி.

"ஆம். தோழி! நான் நாள்தோறும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொள்வேன். அப்போது என் சிந்தனை கழிந்த காலத்துக்கு ஓடும். கயல்மீன் போல் நீண்டு அடர்த்தியாக மையிடப்பட்ட கண்களைக் கண்டல்லவா அவருக்கு நம்மீது பாசம் ஏற்பட்டது என்று நான் நினைப்பேன். மின்னலென முன்னைய நிகழ்ச்சிகள் என் அகக்கண்முன் பளிச்சிடும். என்னை மறந்து கொஞ்சநேரம் கனவு காண்பேன். ஆனால் அக்கனவு சீக்கிரம் முடிந்துவிடும். நினைவுலகத்துக்கு வருவேன். கண்ணாடியிலே பாழ்பட்ட என் அழகுருவம் காட்சியளிக்கும். மையுண்ட அகன்ற விழிகள் பசலையடைந்து இருக்கும். அப்போது பசலைக்கு என் மனம் காரணம் கற்பிக்கும். 'உன் தலைவன் உன்னைப் பிரிந்ததால், பிரிந்து பரத்தையர் இல்லில் உலவுவதால், ஊரார் இதைப் பற்றி உன் காது கேட்கும்படி ஒரு மாதிரியாகப் பேசுவதால் அல்லவா உன் கண்கள் பசந்தன' என்று அது காரணம் கூறும்! இந்தப் பாழும் கண்கள் மட்டும் பசலையடையாதிருந்தால் அவரை எவ்வளவு நிம்மதியாக மறக்கலாம்! என் கண்கள் என் உறுதிக்கு இப்படித் தடங்கலாக இருக்கின்றனவே!"

கேட்டுக்கொண்டிருந்த பாணனுக்கு அமுதம்போல் இவ்வார்த்தைகள் இனித்தன. ஏனெனில், தலைவி தோழியைப்போல

பொதுமேடை

ரங்கூன்,
2—6—51.

தமிழரின் குரல்

பாரதிதாசன் அவர்களின் மணிவிழாவன்று மலர் வெளியிடப்போவதாகத் தெரியவந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்! 'மலர் எப்பொழுது வரும்? எப்பொழுது கிடைக்கும்?' என்று ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு 1-6-51-ல் மலர் கிடைத்தது.

உண்மையில் நான் அடைந்த மகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. மலர் குறைந்த பக்கங்களில் வெளிவந்த போதிலும் நிறையக் கவிதைகள், நிறையக் கருத்துக்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. "பொன்னி"யின் இந்தச் சிறந்த முயற்சிக்கு நன்றி! கவிஞரைப்பற்றிய எனது எண்ணமெல்லாம் இதுதான். அவருக்கு மணிவிழாக் கொண்டாடினுல் மட்டும் போதாது. அவருடைய கவிதைகளைப் பல மொழிகளிலும் மொழி பெயர்த்துத் தமிழரின் குரலைத் திக்கெட்டும் ஒலிக்கச் செய்யவேண்டும். ஆம்! அதுதான் நாம் அவருக்குச் செய்யவேண்டிய கடமை!

வணக்கம்.

கே. எம். கணபதி

அவ்வளவு சினங்கொண்டவளல்ல; கொஞ்சம் முயன்ருல் தலைவனைத் தலைவியிடம் சேர்த்துவிடலாம் என்று அவன் உறுதியாக எண்ணினன். அவன் எண்ணுவதில் உண்மையும் இருந்தது.

○

தலைவன் பரத்தையரிடம் சென்றது தப்பு என்று கூறுவதில் தலைவியும், தோழியும் ஒரே மாதிரி நினைக்கிருர்கள். தலைவன் கொடுமையை நம் கெடுபிடியால் அவனை உணரவைக்க வேண்டும், அவனும் சம அளவு துன்பத்தை அடையவேண்டும், அவ்வளவு எளிதாக அவனுக்கு இடந் தந்துவிடலாகாது எனச் சீறி வாயில் மறுக்கிருள் தோழி.

தலைவன் செய்த தவறு நாம் அவனை அடியோடு மறந்துவிடுமளவுக்குக் கொடியது எனத் தலைவியும் நினைக்கிருள். ஆனுல் தோழியைப் போல அவள் வாயில் மறுக்கவில்லை. மறந்துவிட இயலாது என்பதைக் கண் மேலேற்றிக் குறிப்பாகச் சொல்கிருள். வந்தால் ஏற்றுக்கொள்வதாகவும் மறைமுகமாக மொழிகிருள்.

அம்ம வாழி தோழி யூரன்
நம்மறந் தமைகுவயி னமறந்(து)
உள்ளா தமைதலு மமைகுவ மன்னே
கயலெனக் கருதிய வுண்கண்
பயலைக் கொல் காவாகுதல்
பெறினே.

— ஐங்குறுநூறு.

[மன்னே — அசை. உண் — மையுண்ட]

இரண்டு ரோஜாக்கள்!

நா. பாண்டுரங்கன்

பூக்கடைக்குப் பக்கத்தில் ஒரு பூக்கூடை!

பூக்கூடையும் ஒரு பூக்கடை தான்.

இரண்டு பூக்கடைகள்!

முன்னதில் நிஜப் பூக்கள் குவிந்து கிடந்தன. பின்னதில் மெய்போல் தோற்றும் பொய்ப் பூக்கள் குவிக்கப்பட்டிருந்தன.

பொய்ப் பூ ஒரு கூடையில்—அதுதான் கடை!

மெய்ப்பூ ஒரு கடையில்—அங்கே அது நிறைந்த பல கூடைகள்.

மெய்ப்பூக் கடைக்காரன் தனக்கு அருகில் வந்து அன்று அமர்ந்திருந்த பொய்ப்பூக்கடைக் காரனைப் பார்த்தான். சிரிப்பு அவன் இதழ்களைத் திறந்தது.

நிஜப் பூக்களைச் சுற்றி வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந் தன!

பொய்ப் பூக்களைச் சுற்றி நிஜப் பூக் கடைக்காரன் 'மலர் விழி களிலிருந்து' கிளம்பிவந்த 'பரி காச வண்டுகள்' மொய்த்துக் கொண்டிருந்தன!

இரு கடைக்காரர்களும் சொல்லிவைத்தாற்போல ஏதோ வேலையாகத் தத்தம் இடத்தை விட்டு வெளியே போனார்கள்!

●

நிஜ ரோஜாக்கள் பொய் ரோஜாக்களைப் பார்த்தன. பொய் ரோஜாவின் கவர்ச்சியைப் பார்த் ததும் ஒரு கணம் நிஜ ரோஜா வுக்குத் தூக்கிவாரிப் போட் டது.

"நான் நாடாளும் ராஜா! நீ நாடகமேடை ராஜா! — யார் உயர்ந்தவர்?"

—நிஜ ரோஜா, காகித ரோஜாவைப் பார்த்துக் கேலி யாகக் கேட்டுவிட்டு அலட்சிய மாகச் சிரித்தது!

"நாட்டில் உலவும் பிச்சைக் காரனைவிட நாடகமேடையில் உலவும் பிச்சைக்காரன்தான் எல்லாவற்றிலும் உயர்ந்தவன்!"

—காகித ரோஜா, அமைதி யுடன் பதிலளித்துவிட்டுச் சாந்தமாகச் சிரித்தது!

நிஜ ரோஜாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு ஆத்திரம் ஆத்திரமாக வடிந்தது!

"நான் - உண்மை! நீ, பொய்! எது சிறந்தது?"

—அலைகளில் குதிக்கும் நீர்த் துளிபோல் வந்தது நிஜ ரோஜா வின் கேள்வி.

"நான், செயற்கை! — நீ, இயற்கை! — இரண்டும் உண்மைகள்தாம். உண்மைகள் எல்லாமே உயர்ந்தவையல்லவா?"

—இலைகளில் இருக்கும் பனித்துளிபோல் வந்தது காகித ரோஜாவின் இந்தப் பதில்!

நிஜ ரோஜாவின் மனம், காகித ரோஜாவுக்கு எப்படியாவது பாடம் கற்பிக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.

நேற்றுத்தான் முட்டையிலிருந்து வெடித்துவந்த கோழிக் குஞ்சின் நெஞ்சு, நெடுநாள் வாழ்ந்து வரும் வேங்கையின் நெஞ்சுடன் பலப் பரீட்சைக்கு வருவதா?

நிஜ ரோஜா, நீட்டி இழுத்துக்கொண்டு பேசத் தொடங்கியது.

"பொய் ரோஜாவே! தண்ணீர் பட்டதும் என் உடல் மின்னும்; உன் உடல்?..."

காகித ரோஜா, பதிலை யோசித்தது.

"நிஜரோஜா நான்!...வண்டுகள் என்னிடம் வரும்; வண்டுவிழி மாதர்கள் என்னிடம் வருவர்; வண்டுவிழி மாதர்களுக்குப் பரிசு தர நினைக்கும் வசீகர வாலிபர்கள் என்னிடம் வருவர்; வண்டாய் மாறி வாழ்க்கையை வண்ணமலர்க் காடாக்கி வாழும் கவிஞர்கள் என்னிடம் வருவர். ......என் சிங்காதனமோ, சிலைகளின் கழுத்து — சிலைகளாகிச் சொக்கவைக்கும் சிங்காரிகளின் கூந்தல் — கலைகளையும் நாட்டின் உயர்நிலைகளையும் பெருக்கும் அறிஞர்களின் மார்பு! — இது மட்டுமா? என்னுலான மாலை இல்லாமல் எந்த விழாவுமே நடைபெற மாட்டேன் என்கிறது! என் மாலை இல்லாத விழாவின் சிறப்பு, கதிரவன் இல்லாத காலை — மலர்கள் இல்லாத சோலை — சாயம் இல்லாத சேலை! அம்மட்டோ! அழகுக் கிளிகளின் அழகு, சிற்றிடையாளின் அதரம், அது தரும் சுவையைப்போல் விரிந்த வானத்தின் வனப்பு......இவையெல்லாம் என்னைப் பார்த்தே முதல் முதலில் நிறம் தீட்டிக்கொண்டதாகக் 'கல்பனு முனிவர்' இயற்றிய 'புஷ்ப புராணத்தில்' ஆதாரம் 'பரந்த வான் பால் நிலாப்போல்' ஜொலிக்கிறது!......"

நிஜ ரோஜாவின் பிரதாபத்தைக் கேட்கக் கேட்கக் காகித ரோஜாவின் மௌனம் வளர்ந்தது. அதன் மௌனம் வளர்ந்த வேகத்தைவிட நிஜரோஜாவின் 'அரட்டையும்' வளரத்தொடங்கியது!

"கண்ணீரை அடக்கிக்கொள், காகிதரோஜாவே! இன்னும் என் புகழைக் கேள்! மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, பனியில் உலர்ந்து பாடுபட்டு வாழும் குடிசைக் குமரியின் சொரசொரப்பான கன்னங்கள் உன் இதழ்கள்! — என் இதழ்களோ, சிரிப்பிலே பிறந்து சிரிப்பிலே வளர்ந்து, சிரிப்பிலேயே வாழ்ந்து — கொழுகொழுவென்றிருக்கும் மாளிகை மனைகரிகளின் வழவழப்பான

கன்னங்கள்! என்னுடைய உயிர் பிச்சைக்காரத் தென்றலைப் பிரபு வாக்கும் நறுமணம்! என்னுடைய பாட்டு, கனிகளின் சுவையையெல்லாம் வெட்கிப் போகச் செய்யும் இனிய மது!- தேன்! உனக்கோ, உயிர் — உணர்வு ஒன்றுமே கிடையாது! அரும்பி, போதாகி, மலரும் மாப்பேறு எனக்கு உண்டு! உனக்கோ அது ஒன்றும் இல்லை! தூரத்தில் இருக்கும்போது ஆளை மயக்குவாய்! பக்கத்தில் வந்ததும் சிறிது வியப்பிற்குப் பிறகு அலட்சியத்தையும் அருவருப்பையுமே பெறுவாய்! நானோ, எட்ட இருக்கும்போது தேனான மணத்தைத் தருவேன், அருகே வரும்போது வருகிற அவரையே — அவளையே பெறுவேன்! வேடிக்கை ரோஜாவே! நீ உண்டானதே உலகில் நான் உண்டானதால்தான். நீ ஒரு 'காப்பி!' — கவிஞர்கள் கூட உன்னைக் காய்கிறார்கள். உன் மதிப்பு, உலகில் மிகவும் மட்டம் — மட்டம் — மட்டம்! கவியரசர் பாரதிதாசன் 'குயில்' கூவுவதில் கொஞ்சம் கேள்......'இயற்கை உனக்களிக்கும் மண

மலரிருக்கையில் ஏனிந்தக் காகிதப் பூ மகளே!...”

—தேர்தலில் வெற்றிகண்ட அபேட்சகரைப்போல ஒரு பார்வை பொய் ரோஜாவைப் பார்த்துவிட்டு, நிஜ ரோஜா பேச்சை நிறுத்தியது.

காகித ரோஜாவின் மௌனம் இரண்டு மணி இரவைப்போல இருந்தது. இருள் கலைந்தது. பேசத் தொடங்கியது.

“தொல்காப்பியம் படித்த புலவனைப்போல் பழம் புகழே பாடும் மணமலரே! நட்டுவைத்த கன்றில் தண்ணீரைத் தொடர்ந்து கொட்டியதும் விடுவிடுவென்று வளர்ந்து அடர்ந்து படரும் செடியில், வெடித்து மலர்வதே உன் பிறப்பு — யந்திரம்போல, உன் பிறப்பு, உடல் வேலையை அடிப்படையாகக் கொண்டது. என் பிறப்போ, மூளைவேலையை அடிப்படையாகக் கொண்டது! நீ - தொழில்! நான் - கலை! தொழிலை உண்டாக்குவது வயிற்றில் கிளம்பும் அடுப்புத் தீ! கலையை உண்டாக்குவது கருத்தில் கிளம்பும் காட்டுத் தீ! தொழில் — மிருகம்! கலை — மனிதன்! மனிதனும், மிருகம்தான். ஆனால் மிருகத்தைவிட மனிதனே உயர்ந்தவன். அதாவது உன்னை விட நான்! என்ன புரிகிறதா?”

காகித ரோஜா இப்படிக் கேட்டது.

இரு கடைக்காரர்களும் அவரவர் இடத்தில் வந்து அமர்ந்தனர்.

காகித ரோஜா, பதில் சொல்லியதே தவிர, உண்மையில் மூன்றும் வகுப்பில் ‘எம். ஏ.’ பாஸ் செய்த மாணவனைப்போல் வருந்திற்று!

ஓரணா! அரையணா! இரண்டணா!—இப்படி வந்து விழுந்து கொண்டிருந்த துட்டுக்கள், நிஜ ரோஜாக்களை, ‘ரிஸ்ட்வாட்ச்’ கட்டிய கைகள், வளையல் குலுங்கும் கைகள் — இப்படிப்பட்ட கைகளில் ஏற்றுமதிசெய்து வைத்துக்கொண்டிருந்தன! காகித ரோஜாவைக் கண்கள் கண்டன. கால்கள் நின்றன. சிறு சிரிப்புக் கிளம்பியது. கால்கள் தொடர்ந்து நடந்தன!— ஒன்றுகூட விற்பனையாகவில்லை.

“ஆமாம்! நம்முடைய மதிப்பு மிகவும் மட்டம்தான். நாம் ஏன் பிறவி எடுத்தோம்? முன்பிருந்தபடி மெல்லிய காகிதமாகவே இருந்திருந்தாலாவது, புதுமணம் வீசும் ஊதுபத்திகள் — புது நகைகள் — புது வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளைச் சுற்றிக் கட்டவாவது பயன்பட்டிருப்போம்! தனியே, சாயமாக இருந்திருந்தாலாவது — வெள்ளைப் பட்டுநூலில் ஐக்கியமாகி — பட்டுத் துணியாலான ஜாக்கெட்டாகி யிருக்கலாம். ஜன்மம் சாபல்யமாகி இருக்கும்!— ஏன் இப்பிறவி எடுத்தோம்? ஏன் இப்பிறவி எடுத்தோம்?...”

காகித ரோஜாவின் மனதில் பயங்கர மேகங்கள் சூழ்ந்து

கர்ஜித்தன. திடீரென அறிவுக் காற்று வீசியது! மேகங்கள் எங்கோ சிதறி ஓடிச் சிதைந்து மறைந்தன!

"ஏன் பிறவி எடுத்தோம்? என்று கேட்கிறாயே! முட்டாளே! பிறவி எடுப்பது உன் கையிலா இருக்கிறது. உன்னை, நீயா உண்டாக்கிக்கொண்டாய்?"

பேய்க்காற்றாய் வீசிய அறிவின் பேச்சு இது!......

காகித ரோஜாக் கடைக்காரன் நிஜ ரோஜாக் கடைக்காரனைப் பார்த்து "அண்ணே! உன்பாடு கொண்டாம்தான்" என்றான்.

"இல்லையப்பா இல்லை! அரையணாவும் காலணாவுமா இதுவரை பத்தணாத்தான் சேர்ந்திருக்கு. போட்ட முதல் ஐந்து ரூபாய். இன்னும் இங்கே ஏழு குடலையில் பூ அப்படியே இருக்கு. நாலு நாளைக்கு வீட்டு அடுப்பிலே புகை கிளம்பணும்னா நாலு பூக்கூட இங்கே தங்காமல் இருந்தால்தான் நடக்கும்!"

அடிபட்ட பாம்பின் சீறல் அவன் பெருமூச்சாக வெளிவந்தது.

அடிவானத்திலிருந்து சந்தன வில்லையைப்போல் கிளம்பிய சந்திரன், நடுவானத்திற்கு வந்து வெள்ளித் தட்டைப் போல் ஆனான்! எதிர்த்த கடையில் மணி ஒன்பது அடித்தது! நிஜ ரோஜா போலி ரோஜாவைக் கேலியாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டே இருந்தது.

நீண்ட வெள்ளைக் கொக்கு பறந்துவந்து உட்காருவதைப் போல, ஒரு 'ஸ்டுடி பேக்கர்' பூக்கடையின் முன் வந்து நின்றது. காரின் ஒளிவீசிய முன் விளக்குகள் இரண்டும் நின்றன. கைவிரல்களில் அணிந்திருந்த மோதிரத்தில் பதித்திருந்த வைர விளக்குகள் ஒளிவிட, திறக்கப்பட்ட கதவிலிருந்து தொந்தியை முன்னே இறக்கிக் கொண்டே ஓர் பெரிய ஆசாமி இறங்கி நின்றார்.

ஆமாம் — நாடகக் கம்பெனி மானேஜர்!

பள்ளியறைப் புதுப்பெண் போல் நாணிக்கோணி நெளிந்து வளைந்து எழுந்து நின்றான் நிஜப் பூக்கடைக்காரன்.

"எவ்வளவுக்கு எஜமான் பூ கட்டவேண்டும்?"





"உன் பூ வேண்டாம்'

"எஜமான்!"

"அதோ! அந்தப் பூ வேண்டும்!"

"அது காகிதப்பூ எஜமான்!" சிரித்துக்கொண்டே சொன்னான்.

"மடையர்கள்! இன்றிலிருந்து புது நாடகம். பூக்கடைச் சீனுக்குப் பூ வாங்க மறந்துவிட்டார்கள். அரை மணி நேரம் இருக்கு, ஆட்டம் ஆரம்பிக்க. இப்பத்தான் அறிவு உதயமாயிருக்கு! மடப் பசங்க! நல்ல வேளை—இங்கே இந்தப் பூக் கிடைச்சுது."

பத்து ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு கை—காகிதப் பூக் கூடையைக் காரின் உள்ளே வைத்தது. ஆச்சரியத்தால் காகிதப் பூக்காரன் உலகை மறந்தான்! காகித ரோஜா நிஜ ரோஜாவைப் பார்த்துச் சிரித்தது!...

ஆத்திரம்—அவமானம்—அடங்காத நிராசை—மூன்றும் நிஜ ரோஜாக் கடைக்காரனை வாட்டி வருத்தின! குடலைகளில் நிறைந்திருந்த வாடிய ரோஜாக்களை அப்படியே போகும் வழியிலிருந்த குப்பை மேட்டில் உதறிக் கொட்டிவிட்டு அவன் மேலே நடந்து மறைந்தான்! குடு குடு வென்று ஓடிவந்த ஒரு நாய் பூக்களை முகர்ந்து பார்த்துவிட்டு முன்னங் கால்களாலும் பின்னங் கால்களாலும் அவற்றைச் சிதற வைத்துச் சின்னாபின்னப்படுத்திக் குப்பையைக் கிளறிக் குழி பறித்து அதில் உருண்டு புரண்டது!

"ஐயோ அம்மாடி! அவ்வளவும் ரோஜாப்பூ!"—ஒரு கத்தல்!—ஆர்வத்தோடு குனிந்து இரு கை கொள்ளுமட்டும் ரோஜாக்களை அள்ளி அணைத்துக்கொண்டு எழுந்தாள் அங்கு வந்த பரட்டைத்தலைப் பிச்சைக்காரச் சிறுமி!

"சீ கழுதே! கீழே போடு! மந்திரிச்சி ஜபிச்சது, பீடை கழிச்ச பூவா இருக்குமடி! மடக்கி இழுத்திடும் கால் கையை! போடு கீழே! கையை உதறடி! பிசாசே! உதறு!"

சிறுமியின் தாய் கூச்சலிட்டாள்!

தலையை ஆட்டி 'லொள் லொள்' என்று நாய் குரைத்தது!

கண்ணீரும் பூக்களும் கீழே உதிர்ந்தன!

பரிசு யாருக்கு?

டி.ஜே. இன்பராஜ்

நடுப்பகல் பன்னிரண்டு மணி. பாலுவும் சுந்தரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கு வந்த அவர்களுடைய மாமா, "என்னுடைய மோதிரம் காணாமற் போய்விட்டது. அதைத் தேடி எடுத்துவந்தால் ஐந்து ரூபாய் பரிசு கொடுப்பேன்" என்றார்.

"மாமா, அந்த மோதிரம் அதிக விலையுள்ளதா?" என்று சுந்தர் கேட்டான்.

"இல்லையில்லை. சாதாரண வெள்ளி மோதிரம்தான். பரம்பரையாக அது குடும்பத்தில் இருந்து வருகிறது. அந்த மோதிரம் காணாமற் போனதிலிருந்து எனக்கு மன நிம்மதியில்லை" என்றார் மாமா.

"நாங்கள் கண்டுபிடித்துக் கொடுக்கிறோம்" என்று பாலுவும் சுந்தரும் சொன்னார்கள்.

பாலுவும் சுந்தரும் அண்ணன் தம்பிகள். பாலுவுக்குப் பன்னிரண்டு வயது. சுந்தருக்கு ஒன்பது வயது. விடுமுறைக்கு அம்மாவுடன் மதுரையிலுள்ள மாமா வீட்டிற்கு வந்திருந்தனர். அவர்களுடைய மாமா மதுரையில் பெரிய வியாபாரி.

பாலுவும் சுந்தரும் சேர்ந்து யோசித்தனர். "நாம் இருவரும் சேர்ந்தே தேடுவோம். யார் கையில் கிடைத்தாலும் மாமா கொடுக்கும் பரிசுத் தொகையைச் சமமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்" என்று பாலு சொன்னான்.

"நல்ல யோசனை. நான் குளிக்கும் அறைக்குப் போய் மோதிரத்தைத் தேடுகிறேன். நீ மாமாவின் படுக்கை அறையில் தேடு" என்று சொல்லிவிட்டுச் சுந்தர் குளிக்கும் அறைக்குச் சென்றான்.

பாலு தனக்குள் சிரித்துக்கொண்டான். 'என்னிடம் மோதிரம் அகப்பட்டால் பரிசுத் தொகையில் பாதியைச் சுந்தருக்குக் கொடுக்கப் போவதில்லை. அவனிடம் மோதிரம் அகப்பட்டால் பரிசுத் தொகையில் பாதி எனக்குக் கிடைத்துவிடும்' என்று நினைத்தவாறு மாமாவின் படுக்கை அறைக்குச் சென்று மோதிரத்தைத் தேட ஆரம்பித்தான்.

படுக்கை, மேஜை எல்லாவற்றையும் பார்த்துவிட்டான். மோதிரத்தைக் காணவில்லை. இன்னும் அவன் பார்க்க வேண்டியது அறையின் மூலையிலுள்ள அலமாரிதான்.

'எப்படியும் அலமாரிக்குள்தான் மோதிரம் இருக்கவேண்டும்' என்று பாலு சொல்லிக் கொண்டான். அலமாரியைத் திறந்தான். அவன் நினைத்தபடி அலமாரியின் அடித் தட்டில் மாமாவின் வெள்ளி மோதிரம் இருந்தது. அதை ஆவலுடன் எடுத்துக் கொண்டான்.

'இந்த மோதிரத்தைச் சுந்தருக்குத் தெரியாமல் மாமாவிடம் கொடுத்தால்தான் பரிசுத் தொகை முழுவதையும் நான் வைத்துக்கொள்ள முடியும். மாலையில் மாமாவுடன் உலாவப் போகும்பொழுது அவரிடம் மோதிரத்தைக் கொடுக்கவேண்டும். அதுவரையில் சட்டைப் பையில் இதை வைத்திருப்பேன்' என்று திட்டம் போட்டபடி ஹாலுக்கு வந்தான். அங்கு மாட்டப்பட்டிருந்த தன்னுடைய சட்டைப் பையில் மோதிரத்தைப் போட்டான். மறுபடியும் படுக்கை அறைக்கு வந்து மோதிரத்தைத் தேடுவதுபோலப் பாலு இங்குமங்கும் திரிந்துகொண்டு இருந்தான்.

அந்தச் சமயத்தில் "சுந்தா, எங்கே இருக்கே? சீக்கிரம் வா. மாமாவுடன் கடைக்குப் போகலாம்" என்று அம்மா சுந்தரைக் கூப்பிட்டாள்.

"நான் மாமாவின் மோதிரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறேன்" என்று குளிக்கும் அறைக்குள்ளிருந்து சுந்தர் கத்தினன்.

"பாலு தேடுவான். நீ சட்டையைப் போட்டுக்கொண்டு சீக்கிரம் வா. மாமா காத்துக் கொண்டிருக்கிறார்."

சுந்தர் அவசரமாகச் சட்டையை மாட்டிக் கொண்டு ஓடினன்.

வெயில் கடுமையாக அடித்துக்கொண்டிருந்தது. சுந்தர் சட்டைப் பையிலுள்ள கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான். கைக்குட்டையைத் திரும்பப் பையில் வைக்கும்பொழுது பையின் அடியில் ஏதோ தட்டுப்பட்டது. சுந்தர் அதை வெளியில் எடுத்தான். அது மாமாவின் வெள்ளி மோதிரம்!

"மாமா, இதோ உங்கள் வெள்ளி மோதிரம். ஆனல் இதைநான் கண்டுபிடிக்கவில்லை. என்னுடைய சட்டைப் பையில் இருந்தது" என்றுன் சுந்தர்.

"உன்னுடைய சட்டைப்பையில் இருந்ததா? அதை நான் அலமாரியில் அல்லவா வைத்தேன்!" என்றுர் மாமா.

"என்ன, மோதிரத்தை அலமாரியில் வைத்தீர்களா? காணுமல் போய்விட்டதாகச் சொன்னீர்களே!" என்று அம்மா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"அதை அங்கு வைத்துவிட்டு, யார் அதைக் கண்டுபிடிக்கிறுர்கள் என்பதை அறிய இரண்டு பேருக்கும் விளையாட்டாகப் போட்டி வைத்தேன். ஆனல், சுந்தரின் சட்டைப் பைக்கு மோதிரம் எப்படி வந்தது என்பதுதான் தெரியவில்லை" என்றுர் மாமா.

அம்மா சுந்தர் போட்டுக்கொண்டிருந்த சட்டையைப் பார்த்துவிட்டு, "அட, இது பாலுவின் சட்டையல்லவா? அவசரத்தில் நீ போட்டுக்கொண்டு வந்துவிட்டாயே!" என்றுள்.

மாமாவிற்குக் கொஞ்சம் விஷயம் புரிந்தது. சுந்தர் தனக்கும் பாலுவுக்கும் மோதிரம் சம்பந்தமாக நடந்த பேச்சை மாமாவிடம் கூறினன். பாலு, சுந்தரை ஏமாற்ற நினைத்திருக்கிறுன் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

"ஏமாற்ற நினைப்பவன் ஏமாந்து போவான் என்பது பாலு விஷயத்தில் நிச்சயமாகிவிட்டது. நீ மோதிரத்தைக் கண்டுபிடிக்காவிட்டாலும் அதை நீயே என்னிடம் முதலில் கொடுத்தாய். உனக்குத்தான் பரிசு" என்று மாமா சுந்தரிடம் கூறினர்.

கடையிலிருந்து திரும்பும்பொழுது சுந்தர் அழகிய சட்டையைப் போட்டுக்கொண்டு வந்தான். அவன் மாமா கொடுத்தபரிசு தான் அது. அதன்விலை ஐந்து ரூபாய்!

கல்லடி!

அட்டைப்படக் கதை

எழுதியவர்:
வீர. பழனியப்பன்

'டிண்.....டிண் டிண்......'

கடிகாரத்தில் மணி எட்டு அடித்தது.

அவசரம், அவசரமாகப் புத்தகங்களை அள்ளிக்கொண்டு பாலு பள்ளிக்கூடத்திற்குப் போவதற்குத் தயாரானான். அப்பொழுதுதான் துரைசாமி குளித்துவிட்டுச் சாப்பிடுவதற்கு உள்ளே நுழைந்தான். பாலுவின் அவசரக்கோலம் அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது!

"ஏய்! என்னடா இது? எட்டு மணிக்கெல்லாம் பள்ளிக்கூடம் கிளம்பிட்டே! எங்கே யாரோட குஸ்தி போடுறதா உத்தேசம்?"

"ஊஹூம், எட்டு மணிதான் ஆச்சோ! அப்புறம் நேரம் கழிச்சுப் போனா வாத்தியார் வேறே அடிக்கிறாரு, உனக்கென்ன தெரியும்? நீ உன் வேலையைப் பாரு, மாமா."

கெஞ்சலில் ஆரம்பித்து அவன் வார்த்தைகள் கோபத்தில் முடிந்தன.

"ரொம்பப் பயந்தவன் மாதிரிதான் பேசுறது......ஏண்டா, இந்த அழுக்குச் சட்டையை மாட்டிக்கிட்டா பள்ளிக்கூடம் போகப்போறே? சீ வேறே சட்டை போட்டுக்கிட்டுப் போடா" என்று கடிந்தவாறு கூறினான் துரைசாமி. அப்பொழுதுதான் பாலு தன்னுடைய சட்டையைக் கவனித்தான். உண்மையிலேயே அது அழுக்காகத்தான் இருந்தது. இதைப்பற்றிய கவலையெல்லாம் எட்டு வயதுச் சிறுவனுக்கு எப்படி இருக்க முடியும்?

"அக்கா! இங்கே வந்து உன் மகன் இருக்கிற லட்சணத்தைப் பாரேன்" என்று உள்ளே இருந்த தன் தமக்கைக்குக் குரல் கொடுத்தான் துரைசாமி.

'அழுக்குச் சட்டை போட்டுக்கொண்டு போனால் அம்மா அடிக்கும்' என்ற ஞாபகம் அப்பொழுதுதான் அவனுக்கு உண்டாகியது.

"மாமா, மாமா, நான் வேறே சட்டை போட்டுக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போறேன். அம்மாக்கிட்டே சொல்லிடாதே மாமா"

பயத்தினால் ஏற்பட்ட பணிவைத் துரைசாமி பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. "அப்படி வாடா வழிக்கு! சரி, வேறே சட்டை மாட்டிக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போ" என்று அதிகாரப் பூர்வமாக உத்தரவு கொடுத்துவிட்டு உள்ளே சென்றான். அதோடு அவனுடைய பொறுப்புக் கழிந்துவிட்டது.

ஆனால்......

சிறுவன் பாலுவுக்கோ ஆத்திரம், ஆத்திரமாக வந்தது.

இந்த நேரத்தில் வேறு இடத்தில் யாராவது இதுபோல அதிகாரம் செய்திருந்தால்... கையில் கிடைத்ததை எடுத்து அவர்கள் மீது வீசியிருப்பான். ஆனால் இப்பொழுது வெறும் முறைப்பும் முனகலும் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. மனதிற்குள்ளாக மாமாவைக் கருவிக்கொண்டு வேண்டா வெறுப்புடன் வெள்ளை உடை மாற்றிக்கொண்டு வெளியேறினான்.

○

ஓட்டம் கலந்த நடை; அதிலே கலந்திருந்த விறுவிறுப்பு — இவையெல்லாம் அந்தத் தெருவைக் கடக்கும் வரையில்தான் இருந்தது. பிறகு நடையிலே ஒரு நிதானம்; சுற்றுமுற்றும் சுழன்ற ஒரு பார்வை; அந்தப் பார்வையிலே ஒரு திருப்தி ஒளி. அவ்வளவுதான் .... அந்தத் தெருவை ஒட்டியிருந்த ஒரு சந்திற்குள் சடக்கென்று நுழைந்துவிட்டான்.

சந்தின் இடது புறத்திலே ஒரு முள் வேலி. அதை ஒட்டியவாறு இருந்த தோட்டத்தினுள் ஒட்டு மாமரங்கள். பாலுவின் கண்கள் தோட்டத்தைத் துழாவின. தோட்டத்தில் ஒருவரையும் காணோம். பிறகு மரத்தின் மீது ஒரு நோட்டமிட்டான். உச்சிக் கிளையிலே இலை மறைவில் இரண்டு பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அவன் கண்களிலே ஆசைத்தீ. மேலே அவன் ஒன்றும் சிந்தனை செய்யவில்லை. கீழே குனிந்தான். நாலைந்து கற்களைப் பொறுக்கினான். பழங்களுக்குக் குறி வைத்தான். 'விர்' சென்று ஒரு கல் பறந்தது.

"பட்......"

குறி தவறவில்லை. ஆனால் பழங்கள்தாம் தோட்டத்திற்குள்ளேயே விழுந்துவிட்டன. பாலு ஏமாற்ற மடைந்தான். கீழே விழுந்துகிடந்த பழங்கள் கேலி செய்தன. பாலு தோல்வியடைய விரும்பவில்லை. அடுத்த முயற்சியை ஆரம்பித்தான். வேலியை விலக்க ஆரம்பித்தான். கையிலே குத்திய முட்களைப் பற்றி அவன் கவலைப்படவே இல்லை! வெற்றியைப் பற்றிய எண்ணத்தில் வேதனை, என்ன செய்துவிடும்? வேலியை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தான். முகத்திலே ஒரு வெற்றிக் களிப்பு மின்னியது. பழங்களை எடுத்தான். பற்களில் ஒரு விறுவிறுப்புத் தட்டியது. ஒரு கடி......அப்பா அந்தப் பழத்திற்குத்தான் என்ன ருசி!

வெற்றியின் போதை அவன் கால்களின் வேகத்தைக் குறைத்தது. ஒய்யாரமாக வந்துகொண்டிருந்தான். திடிரென்று ஒரு கை அவனுடைய சின்னஞ்சிறு கையைப் பற்றுவதுபோல் இருந்தது. திடுக்கிட்டான். திமிறினான்; உம்........பிரயோஜனமில்லை; பிடித்திருந்த பிடி தளர்ந்தால்தானே!

"எங்கடா ஓடப் பார்க்கிறே? உம்......"—ஒரு அதட்டல்.

பாலுவுக்கு அப்பொழுது தான் தனக்கேற்பட்ட ஆபத்தின் பயங்கரம் தெரிந்தது. தன்னைப் பிடித்திருந்த ஆளை உற்று நோக்கினான். அவள் ஒரு பெண்! நல்ல அழகியுங்கூட! பயத்தினால் ஏற்பட்ட 'வெட வெட'ப்பிலே அழகையா அவன் கவனிப்பான்?

"வேலியைப் பிரிச்சு உள்ளே நுழையறதுக்கு உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்? உம்...உன்னை..." என்று அவனை உள்ளே இழுத்தாள்.

"இனிமே நான் இதுமாதிரி செய்யலே, என்னை உட்டுடுங்கோ" என்று கெஞ்சினான்.

அந்தப் பெண் பாலுவை உற்று நோக்கினாள். அவள் பார்வை பாலுவின் கையிலிருந்த புத்தகங்களிடம் வந்ததும் தடைப்பட்டு நின்றது.

"நீ என்ன, படிக்கிறாயா?"

"உம்..." அவன் தலையாட்டினான்.

"எந்தக் கிளாஸ்லே?"

பாலு கொஞ்ச நேரம் தயங்கி நின்றான்.

"என்ன, கேட்கிறேன் பேசாமல் நிக்கிறே?" அவள் சீறினாள்.

"மூணாவது படிக்கிறேன்." அவன் கண்களில் ஒருவிதப் பயம் படர்ந்தது.

"படிக்கிறவனுக்கு ஏன் இந்தத் திருட்டுப் புத்தி? உங்கப்பா பேர் என்ன?"

அவள் குரலில் தொனித்த கடுமை அவனைச் சித்திரவதை செய்தது. குறுக்கு விசாரணை வேறு அவன் உள்ளத்தைக் குடைய ஆரம்பித்தது. அவன் மௌனமாய் நின்றான்.

"என்னடா கேக்கிறதுக்குப் பதில் சொல்லாமச் சிலைபோல நிக்கிறே? உங்கப்பா பேரு என்ன? உனக்கு எந்தத் தெருவிலே வீடு?"

"இனிமே நான் இதுமாதிரி செய்யலே" மீண்டும் அதே பல்லவியைப் பாடினான்.

"நீ மறுபடியும் இது மாதிரியெல்லாம் செய்யாமல் இருக்கிறதுக்குத்தானே இதையெல்லாம் கேட்கிறேன். ஒழுங்காப் பதில் சொல்லு. இல்லே இங்கேயே கட்டிப் போட்டு விடுவேன். உம்...சொல்லு"

அவன் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அழ ஆரம்பித்து விட்டான். கண்ணீரைக் கண்டு அவள் கருணை காட்டவில்லை.

"அழவேற ஆரம்பிச்சுட்டியா? சொல்லுடான்னா?" —மீண்டும் ஒரு அதட்டல்.

"இந்தத் தெருவிலேதான் அந்தக் கோடி வீட்டிலே...இம் உம்" கண்ணீர்த் திவலைகள் உருண்டு ஒன்று சேர்ந்து அவன் கன்னத்தில் கோடிட்டன.

"என்ன கோடி வீடா? அது ராமசாமி முதலியார் வீடல்லவா! உம்......அவருக்கு நீ என்ன வேணும்?"

"அவரு......அவரு எங்க தாத்தா..." விக்கல், விம்மல்.

"அப்படின்னு துரைசாமி..."

"எங்க மாமா..."

அந்தப் பெண் அப்படியே வாயடைத்துப்போய் நின்றாள். அவள் முகத்திலே பலப்பல எண்ண அலைகளின் கொந்தளிப்புகள் மின்னல் போல வந்து போயின. பாலுவுக்கோ அவளுடைய திடீர் மௌனத்தின் காரணம் புரியவில்லை!

"ஏன் தம்பி உன்னுடைய பேரு என்ன?"

அவள் குரலில் பழைய கடுமை இல்லை; ஆனால் அதற்குப் பதிலாகக் கனிவு தென்பட்டது.

"என் பேரு பாலகிருஷ்ணன்"

"அதுதான் இதுமாதிரி யெல்லாம் திருடுறே!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

பாலுவின் சிந்தனையில் ஒரு சுழற்சி. 'இவ்வளவு நேரம் ஆத்திரமாகப் பேசிவந்தவள், தாத்தா பேரையும் மாமா பேரையும் கேட்டவுடன் ஆதரவாகப் பேசுவதைப் பார்த்தால் ஒரு வேளை இவளுக்கு அவர்களைத் தெரிந்திருக்குமோ! தெரிந்திருக்கும்...இன்னைக்கு நான் திருடினதை அவர்களிடம் போய் இவள் சொன்னால் அம்மா என்னைக் கொன்னு போட்டுடுவாள்.' இந்த முடிவுக்கு வந்தது தான் தாமதம்! பயம் அவனுடைய பாதி உயிரை அரித்துத் தின்றுவிட்டது.

"நான் திருடினதுக்கு என்னை எது வேணும்னாலும் செய்யுங்க. ஆனா எங்க வீட்டுலே மாத்திரம் போய்ச் சொல்லாதீங்க" என்று கெஞ்சினான்.

"ஏன் தம்பி! உனக்கு மாம்பழம் வேணும்னா வீட்டிலே சொன்னா வாங்கிக் கொடுக்குறாங்க. படிக்கிற பிள்ளை இது மாதிரியெல்லாம் செய்யலாமா?"

அவன் பேசாமல் இருந்தான். திருட்டு மாம்பழத்தின் ருசியைப்பற்றி அவளுக்கு என்ன தெரியும்!

"இனிமே இதுமாதிரிச் செய்வியா?"

"மாட்டேனுங்க. நீங்க மட்டும் வீட்டிலே...

"பயப்படாதே தம்பி. நான் உங்க வீட்டிலே யாருகிட்டேயும் இதைச் சொல்லலே. இனிமே உனக்கு மாம்பழம் வேணும்னா என்கிட்ட வந்து கேளு. நான் பறிச்சித் தாரேன்."

அந்த அனுதாப வார்த்தைகள் அவனுடைய பயத்தை விரட்டின. நன்றி கலந்த பார்வை ஒன்றை அவள்மீது வீசினான். பிறகு, "நான் பள்ளிக்கூடத்துக்குப் போகணும். நேரமாச்சு" என்று தலையைச் சொரிந்து கொண்டே விடை கேட்டான். அவனுக்கே அவன் செயலில் வெட்கம் ஏற்பட்டு விட்டது போலும்!

"சரி, போயிட்டு வா...பாலு! மாம்பழத்தை மறந்துட்டுப் போறியே! அதையும் எடுத்துக்கிட்டுப் போ!"

அவனுக்கு மாம்பழத்தின் மீதுஆசைதான். இருந்தாலும் "எனக்கு வேணுங்க" என்றுமறுதலித்துக் கூறினன்.

"சும்மா எடுத்துக்கிட்டுப்போ, என் இப்படி வெட்கப்படுறே! இனிமேஉனக்கு என்ன வேணும்னுலும் நீ என் கிட்டே வந்து கேளு" என்று அவன் முதுகில் அன்போடு தட்டிக்கொடுத்தாள்!

"மாம்பழத்தை எடுத்துக்கிட்டுப் போ!"

அந்த 'செல்லத்தட்டு' அவன் மேலே விழுந்ததுதான் தாமதம் அவனுக்கிருந்த பயம், கவலேயெல்லாம் பறந்து போய்விட்டன. மாம்பழத்தை எடுத்துக் கொண்டான்.

"பாலு, இனிமே நீ இங்கே அடிக்கடி வந்து போகணும். உம்"

அவள் குரலில் ஏதோ ஒரு உரிமை ஒளிந்திருந்தது.

"வர்ரேன், அக்கா..."

அவள் சிரித்தாள். அந்தச் 'சிட்டு' பறந்துவிட்டது.

"பொல்லாத பயல்" என்று முனகியது அவளுடைய வாய்.

●

இப்பொழுதெல்லாம் ரெஜிஞவுக்கு—மாமர வீட்டுக்காரிக்கு—பாலுவைப் பார்க்கா விட்டால் பொழுது போவதில்லே. பாலுவுக்கோ ரெஜிஞ வீட்டில் சற்றுநேரம் அரட்டை அடிக்காமல் இருந்தால் தலே வெடித்து விடுவது போல் இருக்கும்! வேடிக்கையாக ஆரம்பித்தஅவர்கள் நட்பு வெகு வேகமாக வளர்ந்து விட்டது.

ஒருநாள் எங்கேயோ சுற்றிவிட்டுப் பாலு இரவு ஏழு மணி சுமாருக்கு ரெஜிஞ வீட்டிற்கு வந்தான்.

"ரெஜிஞ, இந்த மாதிரி நீ பயப்படுவது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லே. பணத்தைத்தானே அவர்கள் நம்மிடத்திலிருந்து பிரிக்கமுடியும்? நம்முடைய மனத்தை அவர்கள் பிரித்துவிட முடியுமா?"

உள்ளேயிருந்து ஒரு ஆண் குரல் கேட்டது. பாலு திடுக்கிட்டு நின்ருன். அவனுடைய அனுபவத்தில் வேறு ஆள் அங்கு வருவது இதுதான் முதல் தடவை.

"எங்கேயோ இருந்து வந்த எனக்காக நீங்கள் எல்லோரையும் பகைத்துக் கொள்வதா?

வேண்டாம். எனக்காக நீங்க துன்பப்பட வேண்டாம்."

"பைத்தியம்! என் அழுவுறே? கஷ்டப்படா விட்டால் காதலிலே வெற்றிபெற முடியாது. இது சகஜம். நீ எதற்கும் வீணுகக் கவலைப்படாதே!"

அந்தக் குரல் – அவன் எங்கேயோ கேட்டது போன்ற ஒரு பிரமை தட்டியது. அதற்குப் பிறகு உள்ளேயிருந்து ரெஜினுவின் விக்கலும் விம்மலும் வெளியே வந்தன.

"கண்ணைத் துடைத்துக் கொள் ரெஜிஞு..."

அந்தப் புது ஆளின் தேறுதல் வார்த்தைகள்! பாலுவுக்கு என்ன தோன்றியதோ, கதவைத் தட்டினுன்.

"யாரது?" அந்த ஆண் குரலின் அதட்டலைத் தொடர்ந்து ரெஜிஞ, "யார்......பாலுவா?" என்று கேட்டாள்.

"ஆமாம்."

கதவு திறக்கப்பட்டது. ரெஜிஞுதான் கதவைத் திறந்தாள். பாலு தயங்கிக்கொண்டு நின்முன்.

"என் பாலு, உள்ளே வாயேன்."

பாலு ரெஜிஞுவின் முகத்தை உற்று நோக்கினுன். அவள் கண்கள் சிவந்து போயிருந்தன.

"என்ன பாலு, என்னையே உற்றுப் பார்க்கிறே?" என்று ரெஜிஞ கூறினுள். அவள் உதட்டில் ஒரு பொய்ச் சிரிப்பு மிதந்தது.

பாலுவுக்கு உள்ளே நுழைவதற்குப் பிடிக்கவில்லை. ஆனுல். அவன் ரெஜிஞு...அவளுக்காக உள்ளே நுழைந்தான்.

"ரெஜிஞு..." யாரோ கூப்பிடுவது அவன் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தான். அவனுடைய மாமா துரைசாமி அங்கு நின்றுகொண்டிருந்தான். இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அங்கே ஆச்சரியம் தன்னுடைய வேலையை அழகாக நடத்திவிட்டது!

"ஏய்......இங்கே எங்கேடா வந்தே?" துரைசாமியின் குரலில் ஆத்திரமும் ஆச்சரியமும் கலந்து இருந்தன.

பாலு ஏதோ வாய்க்குள்ளே முனகிக்கொண்டிருந்தான்.

"நான்தான் வரச் சொன்னேன்" என்று பாலுவுக்காக ரெஜிஞு பேசினுள். பாலுவுக்குத் தைரியம் துளிர் விட்டது.

"நான் இங்கே வந்தா உனக்கென்னவாம்!" என்று தன் பழைய பாணியில் ஆரம்பித்தான் பாலு.

"நல்ல மாமா......மருமகப் பிள்ளை" என்று சொல்லி ரெஜிஞு சிரித்தாள். துரைசாமியும் சிரித்தான். ஆனுல் பாலுவோ 'உம்' மென்று முகத்தைத் தூக்கிக் கொண்டான்.

"பாலுவை நீ எப்படிச் சிநேகம் பிடிச்சே, ரெஜிஞு?" என்று துரைசாமி கேட்டான். பாலு ரெஜிஞுவின் முகத்தை நோக்கிக் கொண்டு, 'என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே' என்று தன் கண்களால் வேண்டுகோள் விடுத்தான்.

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு தன் விண்ணப்பத்தின் வெற்றியென்று எண்ணி, "இவருக்குத் தெரிந்தவங்க வேறே ஒருத்தருக்குமே தெரிஞ்சு இருக்கமாட்டாங்க. என் இக்... கூம்" என்று 'கிண்டல் கணை' தொடுத்தான் பாலு.

பாலுவின் பேச்சு ரெஜினாவுக்கு பரமானந்தமாய் இருந்தது.

"ரெஜினா...இந்தப் பயல் வீட்டிலே எங்க அக்காவைத் தவிர வேறு யாரையும் லட்சியம் பண்ணமாட்டான்! இங்கே உன் கிட்டே இவ்வளவு இழையிறது எனக்கே ஆச்சரியமாய் இருக்கு!"

"இதிலே என்ன ஆச்சரியம் இருக்கு? உங்கள் இரண்டு பேருடைய கடிவாளமும் என்னிடத்தில் இருக்கிறப்போ, நீங்கள் இரண்டுபேரும் என்னிடத்தில் ஏன் இழையமாட்டீங்க?" என்று அவர்கள் இரண்டுபேரையுமே கேலி செய்தாள் ரெஜினா.

இந்தக் கேலியின் பொருள் பாலுவுக்குப் புரியவில்லை. அவன் மனம் குழம்பியது. 'நான்தான் மாம்பழம் திருடிவிட்டு அகப்பட்டுக்கொண்டேன். மாமா எதைத் திருடிவிட்டு அகப்பட்டுக்கொண்டார்? அவரும் மாம்பழம் திருடினாரோ?' அவன் துரைசாமியைப் பார்த்தான். ஆசையின் தேக்கமான அவனுடைய மெல்லிய நீண்ட அதரங்களும் அந்த அதரங்களின் வரப்பு போலிருந்த அரும்பு மீசையின் துடிதுடிப்பும் களிப்பு வெறியேறிய கண்களும் 'இவன் ஒரு காதல் திருடன்' என்று காட்டிக் கொடுக்கத்தான் செய்தன. ஆனால் அந்தச் சிறுவனுக்கு இதையெல்லாம் புரிந்துகொள்ளும் வயதா?

"என்ன பாலு! எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை?" ரெஜினாவின் கேள்வி பாலுவின் சிந்தனையைச் சிதைத்தது.

"ஒண்ணுமில்லை அக்கா...... சும்மா..." அவன் மழுப்பினான். அதற்குப் பிறகு ரெஜினா, துரைசாமி, பாலு மூவரும் 'அரட்டை' அடித்துக்கொண்டிருந்தனர். ரெஜினா வாங்கி வைத்திருந்த கேக் அவர்களுக்கு அந்தி விருந்தாயிற்று. மகிழ்ச்சிப் பெருக்கில் நேரம் போனதே தெரியவில்லை. ரெஜினா தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள்.

"சரி, நேரமாயிட்டது. இன்றைக்கு 'நைட் டூட்டி' நான் 'ஹாஸ்பிடலுக்கு'ப் போகணும்..."

"அப்ப நாங்க வர்ரோம், ரெஜினா. பாலு கிளம்படா."

"எனக்கு வீட்டுக்கு வர்ரதுக்கு வழி தெரியும். நீங்க போங்க."

"நீ வரமாட்டியா! உம் வீட்டிலே போய் 'அக்கா'க்கிட்டே சொல்லி, உன்னை என்ன செய்யச் சொல்றேன் பாரு."

அவ்வளவுதான். பாலு சரணாகதி அடைந்தான். பாலுவின் வீறாப்பு எல்லாம் அந்த ஒரு சொல்லைக் கேட்டதும் அடங்கிப் போனதைக் காண அவ

ளுக்கு வேடிக்கையாய் இருந்தது. அவள் தலையை ஆட்டி இருவருக்கும் விடைகொடுத்தாள்.

இருவரும் போய்விட்டனர். இவ்வளவு நேரம் அவள் முகத்தில் குடிகொண்டிருந்த 'சிரிப்பு விளையாட்டு' எல்லாம் எங்கேயோ மறைந்து விட்டன. கவலை—சோகம்—ஏக்கம் இவைகளின் இருப்பிடமாய் அவள் முகம் காட்சியளித்தது.

○

பாலுவின் பரீட்சைக்கு இன்னும் பத்துப் பனிரண்டு நாட்கள்தான் இருந்தன. அவன் வீட்டில் உட்கார்ந்துகொண்டு பாடங்களை உருப்போட்டுக்கொண்டிருந்தான்.

வெளியிலிருந்துவந்த அவன் தாத்தா ராமசாமி முதலியார் "பாலு, அம்மா எங்கடா?" என்று கேட்டார்.

"அம்மா...அம்மா, தாத்தா கூப்புடுறாரு; வந்துகேளு" என்று உள்ளே இருந்த தன் தாயாருக்குக் குரல் கொடுத்து விட்டுத் தன் வேலையில் கவனம் செலுத்தலானான்.

முதலியார், பாலுவின் தாயார் வெளியே வரும் வரையில் காத்துக் கொண்டிருக்கவில்லை. அவரும் உள்ளே போனார்.

"கல்யாணி ... ... கல்யாணி" அவர் குரலில் அவசரம் காணப்பட்டது.

"ஏன் அப்பா, என்ன சமாசாரம்...?"

"துரை வந்தாக்க சொண்டிலே ஒண்ணு கேட்டுப்புடு. நான் கொஞ்சம் மரியாதையோட இருக்கிறது அவனுக்குப் பிடிக்கல்லே போலிருக்கு."

"என்ன சமாசாரம் அப்பா, ஏன் இவ்வளவு ஆத்திரப்படுறீங்க?"

"ஆத்திரப்பட்டு என்ன செய்யிறது, அம்மா? உன் தம்பி பண்ணுற கூத்துக்குத் தூக்குப் போட்டுக்கிட்டுத் தொங்கணும். நம்ம ஊர் ஆஸ்பத்திரியிலே ஒரு கிருஸ்துவ நர்ஸ் இருக்கிறா. அவளை இழுத்துக்கிட்டு இவன் அடிக்கிற கூத்து......ம்...நான் வெளியே தலை காட்டுறதுக்குக் கூட வெட்கமாயிருக்கு."

வெளியே படித்துக்கொண்டிருந்த பாலுவின் காதில் 'ஆஸ்பத்திரியிலே இருக்கிற கிருஸ்துவ நர்ஸ்' என்ற சொல் விழுந்ததும், படிப்பதில் அவன் புத்தி ஓடவில்லை. உள்ளே நடக்கும் உரையாடலை உன்னிப்பாய்க் கவனிக்கலானான்.

"நம்ம துரை ஒண்ணும் அப்படி நடக்கமாட்டானே!"

"நானும் அப்படித்தான் நெனைச்சுக்கிட்டு இருந்தேன், நேத்து வரைக்கும். இன்னைக்கு நேரிலேயே பார்த்துட்டேன். அவன் ஒழுங்கா, மரியாதையா இருக்கிறதுன்னு நான் வீட்டிலே இருக்கேன். இல்லேன்னு தலையிலே முக்காடு போட்டுக்கிட்டுக் காசி ராமேஸ்வரம் பார்க்கப் போயிடுறேன். பிறகு அவன்

இஷ்டப்படி எது வேணும் னாலும் செய்துகிடட்டும்."

ஆத்திரம் ஆவேசமாகிப் பிறகு விரக்தியாக வடிவெடுத்தது.

"அப்பா நீங்க சும்மா இருங்க. துரை வந்தவுடனே எல்லாத் தையும் கேட்டுச் சரிப்படுத்திடு றேன்." என்று தந்தைக்கு மகள் சமாதானம் கூறினாள்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பாலுவுக்கு ஒன் றும் புரியவில்லை. 'மாமா ரெஜினா வுடன் சேர்ந்து வெளியில் போனால் தாத்தாவுக்கு ஏன் இவ் வளவு கோபம் வருகிறது?' இந்த கேள்வி அவன் மூளையில் மோதி எங்கும் எதிரொலித்தது. பிறகு அவனுக்குப் படிப்பில் நாட்டம் செல்லுமா?

துரைசாமி வீட்டிற்குள் நுழைந்தான்.

"கல்யாணி, அவனும் வந்துட் டான். நீயே கேட்டு என்ன சொல்றான்னு தெரிஞ்சுக்க. அந் தப் பயல் முகத்திலே முழிக்கிற துக்கு கூட எனக்கு என்னமோ போல இருக்கு" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார் கிழவர்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த பாலுவுக்கு, நடந்த விஷயங்களை யெல்லாம் மாமாவிடம் கூற வேண்டும் போல் இருந்தது. உள்ளே வந்துகொண்டிருந்த துரைசாமியைச் சைகை செய்து தன்னருகில் அழைத்தான். இவன் சொல்வதற்கு வாயெடுக்க முன்னதாகவே கல்யாணி அங்கே வந்துவிட்டாள். பாலு பாடங் களைப் படிப்பது போலப் பாசாங்கு செய்ய ஆரம்பித்தான். துரைசாமிக்குப் .பாலுவின் நட வடிக்கைகள் ஒன்றும் விளங்க வில்லை.

"துரை.........நீ செய்யிறது உனக்கே நல்லா இருக்கா?" என்று கல்யாணியின் வாயி னின்றும் கிளம்பிய கேள்வி அவனை ஒரு 'உலுக்கு' உலுக்கி யது.

"என்ன அக்கா, என்ன செய் துட்டேன்?"

"யாரோ ஒரு கிருஸ்துவ நர் ஸோடே நீ ஊர் சுத்துறேன்னு ஊரெல்லாம் ஒரே புரளியா இருக்கு. உனக்கு என்னத்துக்கு இந்த வேலையெல்லாம்?"

அவளுடைய பேச்சிலே தம்பி யைத் திருத்தவேண்டுமே என்ற ஆசை, அவன் கெட்டுவிடக் கூடாதே என்ற கவலை எல்லாம் கலந்து இருந்தன.

"இதற்குத்தானா அக்கா இவ் வளவு ஆத்திரம்? அவளைத்தான் நான் கல்யாணம் செய்துகொள் ளப்போகிறேன்" என்று மிகவும் அமைதியாகவும் அழுத்தமாகவும் கூறினான் துரைசாமி.

இதைக் கேட்டதும் கல்யா ணிக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஆனால் பாலுவுக்கோ ஒரு ஆனந் தம் ஏற்பட்டது.

"துரை! நீ சொல்றது எனக் குக் கொஞ்சம்கூடப் பிடிக்கலே. இப்பவே அப்பா உன் சேதியைக் கேட்டு எங்கேயாவது ஓடிப் போறேன்னு சொல்றாரு. உன் னைப் பெத்து வளர்த்ததற்கு நீ

அவரைத் தள்ளாத வயதிலே இந்தக் கோலமெல்லாம் பண்ண லாமா? வேணும் துரை. நான் சொல்றதைக் கேளு...''

"அக்கா......அவர் எங்கேயும் போகவேண்டாம். நானே அவனே அழைச்சிக்கிட்டு எங்கேயாவது போய்க் கல்யாணம் பண்ணிக் கிறேன். எனக்கு வாழ வழியும் தெரியும்; தைரியமும் இருக் கிறது. நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்.''

தம்பியின் பிடிவாதத்தைக் கண்டதும், அவளுக்கு ஆத்திரம் வந்தது. ஆனால் அதை அவள் வெளிக் காட்டவில்லை. வேறு ஏதாவது சொன்னல் விரசமாய்ப் போய்விடும் என்று பயந்து தணிந்து போகலானுள்.

"துரை, இதுதான் உன் னுடைய முடிவா? எனக்காக வாச்சும் இதை மாத்திக்கடா'' என்று கெஞ்சலானுள்.

"நான் யாருக்காகவும் என் னுடைய முடிவை மாற்ற முடி யாது. என்னுடைய முடிவு மாற ணும்னு ஒன்று நான் சாகணும், இல்லே அவள் சாகணும்'' என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக'ப் பேசினுன் துரை சாமி.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பாலுவுக்கு துரை சாமியின்மீது ஒரு அலாதி அன்பு தோன்றியது. அவனுக் கும் துரைசாமி கூறுவதுதான் சரியென்று பட்டது. 'ரெஜினு அக்காவை மாமா கல்யாணம் பண்ணிக்கிட்டா இவர்களுக்கு என்ன வந்தது?' என்று தன் மனதையே கேட்டுப் பார்த் தான். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல உலகத்தாலேயே முடி யாதபோது, அவனுடைய குழந்தை மனம் எங்கிருந்து கூறப்போகிறது?

வீட்டிலே நடந்ததையெல்லாம் ரெஜினுவிடம் சொல்லவேண்டும் போல் இருந்தது. எண்ணியதை முடிக்க அவன் இளம் உள்ளம் துடித்தது. மெதுவாக அவ்விட மிருந்து நழுவினுன்.

○

சுற்றுமுற்றும் பார்த்தவாறே பாலு ரெஜினு வீட்டிற்குள் நுழைந்தான். ரெஜினு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படித்துக்கொண் டிருந்தாள்.

"அக்கா...'' ரெஜினுவைப் பாலு அவசரமாகக் கூப்பிட் டான். அவள் புத்தகத்தை மூடி விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"அக்கா, இன்னைக்கி வீட் டிலே அம்மாவுக்கும் மாமாவுக் கும் பெரிய சண்டை.'' இதைச் சொல்லும்போதே அவனுக்குக் குஷியாய் இருந்தது.

"இதைச் சொல்றதுக்குத்தான் இவ்வளவு அவசரமாகக் கூப்பிட் டியோ?'' என்று அலட்சியமாய்ச் சொல்லி விட்டுப் புத்தகத்தை மீண்டும் கையில் எடுத்தாள்.

"போ அக்கா. இன்னும் எவ் வளவு சேதியிருக்கு, அதை யெல்லாம் கேட்காமப் புத்தகத் தைப் பிரிக்க ஆரம்பிச்சுட்டியே''

என்று அவள் கையில் இருந்த புத்தகத்தை 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டான்.

ரெஜினு சிரித்துக்கொண்டே, "இன்னைக்கு உங்க வீட்டிலே என்ன நடந்துச்சு? ஏன் உங்க அம்மாவுக்கும் மாமாவுக்கும் சண்டை வந்துச்சு?" என்று அவனுடைய திருப்திக்காகக் கேட்டாள்.

இந்த வார்த்தைகள் போதாதா அவனுக்கு!

"கேளு அக்கா. நான் வீட்டிலே படிச்சுக்கிட்டிருந்தேனு, அப்ப தாத்தா வந்து அம்மா கிட்டே, 'மாமா 'உன்னோட' ஊர் சுத்திக்கிட்டு இருக்குது. அதனலே நான் தலையிலே முக்காடு போட்டுக்கிட்டு எங்கேயாச்சும் போயிடுறேன்'னுரு. அம்மா தாத்தாகிட்ட 'நான் அவனைக் கண்டிச்சுடுறேன், நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க'ன்னு சொல்லிச்சு. சொல்லிச்சா...... என்னக்கா அழுவுறே?" அவன் வார்த்தைகள் தடைப்பட்டு நின்றன.

ரெஜினு கண்களைத் துடைத்தவாறே, "அதெல்லாம் ஒண்ணுமில்லே பாலு. அப்புறம் என்ன நடந்துச்சு?" என்று ஒரு சிரிப்பு சிரித்தவாறு கேட்டாள். அந்தச் சிரிப்பு ஜீவனில்லாத சிரிப்பு என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே பாலு தன்னுடைய பேச்சைத் தொடர்ந்தான்.

"அப்புறம் மாமா வந்துச்சு. அம்மா மாமா கிட்டப் போய் 'நீ செய்யிறது நல்லாயில்லே. அந்த நர்ஸோட நீ இப்படியெல்லாம் திரியலாமா? அப்படி, இப்படி'ன்னு கேட்டுச்சு..."

"அதுக்குத் துரை என்ன சொன்னுரு?" அவள் குரல் படபடத்தது.

"மாமாவோ......'நான் அந்த நர்ஸைத்தான் கட்டிக்கலாம்னு இருக்கேன்'னுரு. அம்மா வாய் அப்படியே அடைபட்டுப் போச்சு. பிறகு என்னென்னவோ எல்லாம் சொல்லிக் கெஞ்சிப் பார்த்துச்சு. ம்...ஒண்ணும் நடக்கல்லே."

ரெஜினு தலையில் கைவைத்தவாறு சற்றுநேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். ஒரு பெருமூச்சு அவள் உள்ளத்தை உடைத்துக் கொண்டு வெளி வந்தது.

"கடைசியாத் துரை என்ன சொன்னுரு, பாலு"

இதைக் கேட்கும்போது அவள் குரல் தழதழத்தது.

"நான் யாருக்காகவும் என்னுடைய முடிவை மாத்திக்கிட முடியாது. 'என்னுடைய முடிவு மாறணும்னு ஒண்ணு நான் சாகணும், அல்லது அவள் சாகணு'ம்னு சொன்னுரு. அதோட நான் வெளியே வந்துட்டேன்."

"ஆமாம் யாராவது ஒருத்தர் செத்தாத்தான் இந்த முடிவு மாறும். துரை..." அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் கொட்டின.

இதைக் கண்டதும் பாலுவுக்கும் அழுகை வந்துவிட்டது.

"நீயேன் பாலு அழுவுறே? கண்ணைத் துடைச்சுக்கோ. அதோ அந்தப் படத்தைப் பார்" என்று சொல்லிச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஏசுவின் படத்தைக் காண்பித்தாள். பாலு அவள் காட்டிய இடத்தைப் பார்த்தான். அங்கு அவன் மனதைக் கவர்ந்தது ஏசுநாதரின் படமல்ல — ரெஜினவும் துரைசாமியும் சேர்ந்து காட்சியளித்த புகைப்படந்தான். அவனுடைய சிந்தனையில் ஒரு புதுமலர்ச்சி. 'இரண்டு பேரும் சேர்ந்து இருப்பது நன்றாக இருக்கிறது' என்ற முடிவுக்கு வந்தான்.

"பாலு, அவர் ஏன் சிலுவையில் தொங்குறாரு தெரியுமா?"

பாலுவுக்கு அப்பொழுதுதான் ஏசுநாதரின் படம் கவனத்துக்கு வந்தது. அவள் கேட்ட கேள்விக்குத் 'தெரியாது' என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினான்.

"மற்றவங்க சுகமாய் இருப்பதற்கு அவரு சிலுவையிலே தொங்குறாரு"—அவள் குரலில் ஒரு 'புதுமாதிரி ஒலி' காணப்பட்டது.

பாலுவுக்கு அவளுடைய பதில் விளங்கவில்லை.

"ஒருத்தர் செத்தாத்தான்மற்றவங்க எல்லாம் சுகமா இருக்க முடியுமா?" அவனை அறியாமலேயே இந்தக் கேள்வி அவனிடமிருந்து வந்தது.

"ஆமாம் பாலு. அப்படித்தான் இன்றைய மக்கள் சமூகம் இருக்கு"—அவளுடைய வாயினின்று ஒவ்வொரு வார்த்தைகளும் நிதானமாக வெளிவந்தன.

"ஏன் அக்கா, ஒருத்தரும் சாகாம எல்லோரும் சுகமா இருக்க முடியாதா?"-அவன் குரலில் சந்தேகம் கவிந்திருந்தது.

"அதுக்கு உன்னைப் போல எல்லோரும் இருக்கணும், பாலு" என்று அவனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அவனுடைய பிஞ்சு உள்ளத்திலே ஒரு கிளுகிளுப்புத் தட்டியது.

சற்றுநேரம் அமைதி.

"நான் பரீட்சைக்குப் படிக்கணும். அப்புறமா வர்ரேன் அக்கா"

"சரி... பாலு"

தான் சுமந்துவந்த சுமையை அவள் நெஞ்சிலே ஏற்றிவிட்டுக் கவலையில்லாமல் வெளியே போய்விட்டான். வேதனை அவள் உள்ளத்தை அழுத்தி விம்மலை வெளிப்படுத்தியது.

○

என்றும் போல அன்றும் பாலு பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பி வந்துகொண்டிருந்தான். ரெஜினுவின் வீட்டின் அருகில் வந்ததும் அவன் கால்கள் மேலே செல்லத் தயங்கின. பழக்க வாசனை விட்டுவிடுமா?

அந்த வீட்டு வாசலில் யாராரோ அவனுக்குத் தெரியாதவர்கள் நின்றுகொண்டிருந்தனர். தேம்பி அழும் குரல் உள்ளேயிருந்து கேட்டது. அவ

னுக்கு ஒன்றும் புரியவில்லை. உள்ளே நுழைந்தான். அவனை யாரும் தடுக்கவில்லை.

உள்ளே — யாரோ ஒருவர் ஒருபுத்தகத்தை வைத்துக்கொண்டு ஏதோ முணுமுணுத்துக்கொண்டிருந்தார். ஒரு நீண்ட பெட்டி பூவால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. அதன் பக்கத்தில் மெழுகுத்திரி எரிந்துகொண்டிருந்தது. அதன் அருகில் உட்கார்ந்துகொண்டு துரைசாமி தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான்.

அந்த நீண்ட பெட்டியில் ரெஜினா கிடத்தப்பட்டிருந்தாள்.

“மாமா” என்று அழைத்தவாறு பாலு துரைசாமியின் பக்கத்தில் சென்றான். துரைசாமி அவனைத் திரும்பிப் பார்த்தான்.

“பாலு...” என்று அவனைக் கட்டிக்கொண்டு ‘ஓ’ வென்று கதறலானான். பாலு திரும்பிப் பார்த்தான். அந்த நீண்ட பெட்டியில் ரெஜினா கிடத்தப்பட்டிருந்தாள்.

“அக்கா......” ஒரு அலறல் அவன் உள்ளத்திலிருந்து வெடித்தது. ரெஜினாவின் முகத்தில் அன்பாகத் தடவினான். அவள் உடம்பு சில்லிட்டிருந்தது. முகத்திலே நீலம் பாய்ந்திருந்தது.

“மற்றவர்கள் [illegible] இருப்பதற்கு அவ[illegible]

யிலே தொங்கறாரு” அன்று ஒருநாள் அவள் சொன்ன வார்த்தைகள் அவனுடைய நினைவுக்கு வந்தன. சுவரில் மாட்டப்பட்டிருந்த ஏசுநாதர் படத்தைப் பார்த்தான். அந்தப் படத்திலே ஒரு தனிஅழகு அவனுக்குத் தென்பட்டது! மீண்டும் பார்வை ரெஜினாவின் உடலின் மீது விழுந்தது. அவன் கண்கள் அருவியாயின.

விம்மல்கள் எதிரொலித்தன. அவனும் துரைசாமியும் வேதனையின் உருவங்கள் ஆயினர்.

வெளியில் இருந்தவர்கள் எல்லோரும் வீட்டினுள் நுழைந்தனர். உள்ளே சந்தடி ஏற்பட்டது. பிணம் இருந்த பெட்டியைத் தூக்க ஆரம்பித்தனர். துரைசாமி பைத்தியம் பிடித்தவன் போல் கதறலானான்.

“ரெஜினா...ரெஜினா...” கதறல் முனகலாக மாறியது.

பாலு பேயறைந்தவன் போல நின்றுகொண்டிருந்தான்.

சவப் பெட்டி வண்டியில் ஏற்றப்பட்டது. வண்டி நகர்ந்தது. வைதீகக் கிருஸ்துவர்கள் ஏதோ பாடிக்கொண்டு வந்தனர். [illegible]லு துரைசாமியின் கரங்களைப் பற்றிக்கொண்டு சவப்

15292

பெட்டி ஏற்றிச் செல்லப்படும் வண்டியைப் பின்தொடர்ந்தான்.

அவன் உள்ளத்திலே ஒரு நீக்கமுடியாத சந்தேகம் நிறைந்திருந்தது. 'நோய்நொடியில்லாமல் சுகமாக இருந்தவள் திடீரென்று ஏன் இறக்கவேண்டும்?' அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"மாமா..."

துரைசாமியின் கையை மெதுவாக இழுத்தான்.

"என்ன பானு?"

அவன் குரலில் எந்தவிதமான உணர்ச்சியும் இல்லை.

"அக்கா ஏன் இறந்து போச்சு?"

மனதிலிருந்த சந்தேகம் வெளிவந்தது.

துரைசாமி பானுவைத் திரும்பிப் பார்த்தான். இந்தக் கேள்வி அவனுடைய ஆத்திரத்தைக் கிளறிவிட்டது.

"ஏனு...எல்லாம் இந்த சமூகம் செய்த சதிதான்."

'சமூகம்' அவனுக்குப் புரியாத சொல். துரைசாமியின் பதில் அவனுக்குத் திருப்தியை ஏற்படுத்தவில்லை.

"சமூகம்னு என்ன மாமா?"

"சமூகம்னு 'சதிக் கிடங்கு'ன்னு அர்த்தம். நீ பேசாமல் வாடா" என்று அவன் ஆத்திரத்தைக் கொட்டினான்.

இந்தப் பதிலும் அவன் மனதில் முழுத் தெளிவை ஏற்படுத்தவில்லை.

"மாமா..." என்று பானு இழுத்தாற்போலத் துரைசாமியைக் கூப்பிட்டான்.

துரைசாமிக்கு இவனுடைய தொந்தரவு பொறுக்கவில்லை.

"பானு, நீ பள்ளிக்கூடத்துக்குப் போடா" என்று அவனை விரட்டினான்.

'இனிமேல் அங்கு நிற்பதில் பயனில்லை'யென்று கருதி அந்தக் கூட்டத்திலிருந்து பிரிந்தான். அவன் உள்ளத்தில் ஒரு போராட்டம்! விளங்காத புதிர்!

புதிர் அவனுக்கு மட்டுமா? சாதிமதக் கல்லடியால் காதற் கனிகளை வீழ்த்தும் பொல்லாத சமூகத்தின் போக்கே, நாகரிக உலகிற்குப் புதிராகத்தானே இருக்கிறது!

வளரும் இலக்கியம்

திரு. வ. ரா. அவர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் முன்னணியில் நிற்பவர். சிறந்த அறிஞர். சீர்திருத்தவாதி; அதாவது சமூகம் முற்போக்கான கொள்கைகளை ஏற்று அடிமை மனப்பான்மையை விட்டுத் தொலைக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவர். 'கோதைத் தீவு' அவரது எண்ணங்களின் மறுபதிப்பு.

கசப்பு மருந்தை நோயாளிக்குக் கொடுத்தால்கூடக் குமட்டுகிறதே என்றுதான் குமுறுகிறான். அதையே 'புரூக்லாக்ஸ் சாக்லெட்'டாகக் கொடுத்தால் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடுகிறான். இதைப்போலத்தான் சமுதாயத்திலே நம்பிக்கையின் காரணமாக மக்களை முன்னேறவிடாமல் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் பழைய சாஸ்திர சம்பிரதாயங்களை அப்பட்டமாக இடித்துக் கூறும்பொழுது பலருக்குக் குமட்டல் வருகிறது. சிலர் வாந்தி யெடுக்கிறார்கள். உண்மையை உள்ளவாறு சொல்லுவதைவிடக் கொஞ்சம் கற்பனையோடு காதல்—அது, இது என்று கயிறு திரித்தால் அதற்கு நல்ல வரவேற்பு மட்டுமல்ல, படிப்பவர்கள் சிந்தனையிலும் லேசாகப் படியத்தான் செய்கிறது. கோதைத் தீவு அம்மாதிரி முயற்சிதான்.

'நாத்திகனே' என்று நாக்கை வலித்துக்கொண்டவர்கள் இவற்றைக் கூர்ந்து படிக்கட்டும்.

"பக்தி என்றும் சோகம் என்றும் சொல்லிக்கொண்டு எப்பொழுதும் புலம்பலிலேயே கிடந்த இந்தத் தேசத்திலே, சிரிப்புக்குப் பஞ்சம் வந்துவிட்டது."

"ஜன்மம், முக்தி, சொர்க்கம், நரகம் என்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு நான் அலுத்துப் போய்விட்டேன். பூர்வ ஜன்மம், புனர் ஜன்மம் என்று விடாமல் ஜபித்துக்கொண்டு வீணர்களாய்ப் போனவர்களைப்பற்றி என்னிடம் நீ பேசவேண்டாம்."

"அற்புதமான இந்தத் தேசத்தைப் படைத்துவிட்டு அதிலே அழகாகவும் ஆனந்தமாகவும் குடியிருந்து வாழ முடியாமல் அடுத்த உலகத்தையும் முக்தியையும் பற்றிப் பிதற்றிக்கொண்டிருந்தால், இந்த நாடு உருப்படுமா?"

இப்படியெல்லாம் வ. ரா. தான் சொல்லியிருக்கிறார். இவைமட்டுமல்ல; கோதைத் தீவிலே அவர் கொட்டியிருக்கும் கருத்துக்களைப் பார்த்தால் நீங்கள் இன்னும் ஆச்சரியப்படுவீர்கள்.

கணபதிராயன் ஒரு கற்பனைச் சிருஷ்டி. அவன் மூலம் தான் சொல்ல எண்ணிய கருத்துக்களைக் கொஞ்சம் துணிச்சலோடு

சொல்லிச் செல்கிறார். இந்தத் துணிச்சல்கூட இருபது ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவருக்குப் பூரணமாக ஏற்பட்டிருக்கிறதென்று எண்ணவும் இடமிருக்கிறது.

ஆண்டாள் பிறப்பு வளர்ப்பைப்பற்றிய புதிய விளக்கம், அகலிகை விசாரணை முதலியன நல்ல ஆராய்ச்சிக் கட்டுரைகள். இதேமாதிரி சத்தியவான்-சாவித்திரி கதையையும் ஆராய்ந்திருக்கலாம்.

வ. ரா. இந்த நூலை எழுதியிருக்கிறார் என்பதற்காகவல்லாமல், நூலிலுள்ள கருத்துக்களுக்காகவே இதனை எல்லோரும் படிக்கலாம்; படிக்கவேண்டும். இது இரண்டாம் பதிப்பு.

கோதைத் தீவு எழுதியவர்: வ. ரா. விலை ரூ. 2-0-0. வெளியிட்டோர்: புத்தக நிலையம், தெப்பக்குளம், திருச்சி.

ஐரோப்பாவின் இரும்புத் திரையாக அமெரிக்காவின் வீட்டோ (VETO) வாக இன்று சோவியத் ரஷ்யா கருதப்படுகிறது. சோவியத் பேரரசின் வளர்ச்சி குறிப்பாக எல்லா நாடுகளிலும் மருட்சியை உண்டுபண்ணி வருகிறது. ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்திற்கு முன் 'அன்னக் காவடி'யாயிருந்த நாடு, இன்று ஐஸ்வரிய அமெரிக்காவே கண்டு நடுங்கும் நிலைமைக்கு வளர்ந்திருக்கிறது. இதற்குப் பலப்பல காரணங்கள், பற்பல அறிஞர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

'சோவியத் ரகசிய ஆயுதம் வைத்திருக்கிறது. அதுதான் மற்ற நாடுகள் மிரளுகின்றன" இவ்வாறு சிலர் நுனிப்புல் மேய்ந்திருக்கிறார்கள். அந்த இரகசிய ஆயுதம் என்ன? இக்கேள்விக்கு விடை கூறவே 'ரஷ்யாவின் ரகசிய ஆயுதம்' முயலுகிறது.

ரஷ்யாவிடம் ரகசிய ஆயுதம் ஒன்றுமில்லை. நாம் ரஷ்யாவைப் புரிந்துகொள்ளாததுதான் 'ரகசியம்' என்பது ஆசிரியரின் வாதம். மேலும் நம் அறியாமையே ரஷ்யாவுக்கு ஆயுதம் என்றும் தக்க ஆதாரங்களோடு கூறுகிறார். சரியான ரகசியமல்லவா? இந்த ரகசிய ஆயுதத்தில் இன்னொரு ரகசியம் என்னவென்றால், நல்ல விஞ்ஞானத் தத்துவங்கள் சரித்திரக் கதைகளைப் போல எல்லோருக்கும் எளிதில் விளங்கும் முறையில் எழுதப்பட்டிருப்பதுதான். தமிழாக்கம் நன்றாக, மூலத்திற்குச் சிறப்புத் தரும் விதமாக அமைந்திருக்கிறது. படிப்பதற்குச் சலிப்பில்லாத வகையில் நடை சரளமாக அமைந்திருக்கிறது.

பொதுவாக, 'ரஷ்யாவின் ரகசிய ஆயுதம்' நல்ல பயனுள்ள புத்தகம்; எல்லோரும் விரும்பிப் படிக்க வேண்டிய ஒன்று.

ரஷ்யாவின் ரகசிய ஆயுதம்: எழுதியவர்: டைசன் கார்ட்டர். தமிழாக்கம்: எஸ். சண்முகம். விலை ரூ. 1—0—0. வெளியிட்டோர்: இலக்கியப் பதிப்பகம், ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு.

சாதாரணமாக மொழிபெயர்ப்புக் கதையென்ருலே யாருக்கும் ஒருவித அதிருப்தி முதலில் ஏற்படக்கூடும். அதிலும் மொழிபெயர்ப்புக் கட்டுரை யென்ருல் கேட்க வேண்டுமா? ஆனால் **'மார்க்கிஸம் என்ருல் என்ன?'** அந்த அதிருப்தி ஏற்படாத முறையிலே நல்ல தமிழாக்கத்துடன் அமைந்திருக்கிறது. உன்னதமான மார்க்சிய தத்துவத்தை ஆங்காங்கே பற்பல சரித்திர ஆதாரங்களோடு நூலாசிரியர் கூறிச் செல்கிருர். கொஞ்சம் பொறுமையோடு வாசித்துச் சென்ருல் நல்ல பல உண்மைகளை நாம் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும்.

மார்க்கிஸம் என்ருல் என்ன?: எழுதியவர்: எமிலிபேர்ன்ஸ். தமிழாக்கம்: ஆர். ராமனுதன். விலை 0—12—0. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை 14.

புன்னகை தவழும் முகத்தோடு அண்ணு—அவரின் கீழ் அணி வகுத்து நிற்கும் தொண்டர் படை; கண்ணையும் கருத்தையும் கவரும் இந்தக் காட்சியை அட்டைப் படமாகக்கொண்டு அரங்கண்ணலின் இதயகீதம் ஒலிக்கிறது.

புலிநிகர் மாந்தர், மொழிவாரிப் பிரிவினை, புது அரசியல், பிரிவினை கீதம் ஆகிய நான்கு கட்டுரைகளின் தொகுப்பு; ஏற்கனவே "திராவிட நாடு" கிழமை இதழில் வெளிவந்ததாம்; விளக்கந்தரும் நல்ல கட்டுரைகள்.

இதயகீதம்: எழுதியவர்: இராம. அரங்கண்ணல். விலை 0–12–0. வெளியிட்டோர்: திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.

அண்ணுத்துரையைப்பற்றி எழுதுவதென்ருல் ஆயிரம் பக்கங்கள் எழுதலாம். அதற்கும் அதிகமாகக்கூட எழுதலாம். ஆனல் தோழர் இளஞ்செழியன் அறிஞர் அண்ணுத்துரையை ஐம்பத்திரண்டே பக்கங்களில் அழகாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டார்.

15-7-51 முதல் விற்பனையாகிறது
ஜெகசிற்பியன் எழுதிய

இதய ஓசை

"பார்வதியின் உள்ளம்
தந்தியறுந்த வீணையைப்போன்றது"
"சுந்தரத்தின் மனம்
சுருதி தவறிய நாதத்தைப் போன்றது"
"ராமுவின் இதயம்
தேவகான தேன் மழை போன்றது!..."
ஆனால்
ரோகிணியின் இதய ஓசை?...
விலை அணு எட்டு
ஒவ்வொருவரும் படித்துப் பரவசமடைய வேண்டிய இலக்கியப் பொக்கிஷம்
கைவசம் உள்ள புத்தகங்கள்:
ஜெகசிற்பியன் எழுதிய
"அன்புத் தீ" விலை 0–12—0
வேலைவில்லாளன் எழுதிய
"முழுமதி" விலை 0--8--0
எங்கும் ஏஜண்டுகள் தேவை.
வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு
விபரங்களுக்கு:
வைகறை வெளியீடு
62, சுப்பராய செட்டித் தெரு,
திருப்பாதிரிப்புலியூர்.

அண்ணாவைப்பற்றிய குறிப்புகள் சிறு சிறு நூல்களாக ஏராளம் வெளிவந்துவிட்டன. ஒன்றுவது அட்டையில் அவரது உருவமின்றி வெளிவரவில்லை. மக்களின் மனப்பான்மையை ஒட்டியே விற்பனையாளர்களும் எழுத்தாளர்களும் அண்ணாவை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் எல்லோரையும் போல அட்டைப்பட அண்ணாவாக இல்லாமல் அறிஞர் அண்ணாவாகத் தோழர் இளஞ்செழியன் வரைந்துள்ளார். அவர் அண்ணாவைப் பல கோணங்களிலே படம் பிடித்துக் காட்டும் அழகு நம்மைக் கவர்கிறது.

அறிஞர் அண்ணாத்துரை: எழுதியவர் மா. இளஞ்செழியன், விலை 0—8—0. வெளியிட்டோர்: திராவிடன் பதிப்பகம், வேலூர்.

சிறுவர் கதைகள்

சைக்கிள் ஜவான்

சக்தி எழுதியது.

சர்க்கஸ் ராஜா

இரா. சிவம் எழுதியது. விலை தனித்தனி 0—1—0. வெளியிடுவோர்: ராஜா பதிப்பகம், முடங்கியார் ரோடு, இராஜபாளையம்.

சிங்கப்பூர்ப் பிரயாணம்

எழுதியவர்: தி. கோவிந்தராஜன், விலை 0—1—0, வெளியிடுவோர்: ராஜன் பதிப்பகம், கோட்டை, சேலம்.

புத்தி, புத்தி

எழுதியவர்: பா. கணேசன், விலை 0—1—0, சுமதி வெளியீடு, 78, மேல வீதி, சிதம்பரம்.

ஸ்கூல் மாட்ச்

எழுதியவர்: சுக்ரீவன், விலை 0—2—0, வெளியிடுவோர்: குமரன் பதிப்பகம், 7, பெத்துநாய்க்கன் தெரு, சென்னை 1.

வரப்பெற்ேறாம்

நாஸ்திகம் நாட்டுக்கு நலந்தருமா?

நூலாசிரியர்: ஏ. மெத்துசலா, விலை 0—8—0, வெளியிட்டவர்: ஏ. மெத்துசலா, ஜெயங்கொண்ட சோழபுரம்.

சமாதான முழக்கம்

கேரள மகாகவி வல்லத்தோள் நாராயண மேனனின் சொற்பொழிவு. விலை 0—2—0. வெளியிடுவோர்: தமிழ்நாடு சமாதானக் கமிட்டி, 31-79, செம்புதாஸ் தெரு, சென்னை 1.

பாலயோகியின் பிரார்த்தனை

விலை 0—8—0.

பாலயோகியின் சிந்தனைச் செல்வம்

விலை 0—4—0.

காந்தீஜியின் கடைசி வாரம்

எழுதியவர்: சாரணபாஸ்கரன், விலை 0—6—0, மேற்கண்ட மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்: தென்றல் மன்றம், கூத்தாநல்லூர். — அரசன்

பிழை திருத்தம்

10—7—51 'பொன்னி' இதழில் வெளியிடப்பட்டிருக்கிற Rainbow Competition No. 55ன் விடைத் தேதி **13—8—51** ஆகும். தவறுதலாக 3-8-51 என்று அச்சிடப்பட்டுவிட்டது

சொர்க்கம்

புதுமைச்சித்தன்

மேய்ச்சலுக்குப் போயிருந்த மாடுகள்கூடத் திரும்பிவிட்டன!

உழைத்தும் உரிமைபெற முடியாத தொழிலாளி வடிக்கும் இரத்தக் கண்ணீர் குளமாகத் தேங்கிவிட்டதைப் போல், அடிவானில் மறையும் கதிரவனின் செவ்வொளி! நட்டுவைத்த கல்தூண் மாதிரி, மரங்கள் அசைவற்று நின்றுகொண்டிருந்தன. அடிவானில் செங்கோளமாகச் சிவந்து விட்டிருக்கும் அந்திச் சூரியனைக் கண்டு, இயற்கையின் அழகைப் புகழும் ஓசை நயம் மிகுந்த கவிதை பாடுவதுபோல், பண்ணொலி எழுப்பும் பறவைகள் கூட வாயடைத்துப் போய், மரக்கிளைகளில் மௌனமாக உட்கார்ந்திருந்தன! விவரிக்க இயலாத பயங்கரத்தை யூட்டும் அமைதியில் மூழ்கிக் கிடந்தது, அந்தக் கிராமம்.

ஆடி அசைந்து மந்த நடையில் வந்த மாடுகள், தங்களுக்கான தொழுவத்தில் சென்று ஈடுபாட்டுடன் அசைபோட ஆரம்பித்தன!

அந்த மலைச்சரிவின் ஒற்றையடிப் பாதையில் மேய்ச்சலிலிருந்து திரும்பிய மாடுகளின் பாதச் சுவடுகள் — கிழவி ஒருத்தியின் மனத்திரையிலிருந்து மங்கி மறைந்துவிட்ட, அவள் திருமண தினத்தன்றைய நிகழ்ச்சிகளைப் போல், பட்டும் படாததுமாகத் தெளிவற்றுத் தெரிந்தன!

அப்பொழுதும் அந்தக் கிழவன் அங்கேயேதான் உட்கார்ந்துகொண்டிருந்தான். அந்த மலையிலிருக்கும் கற்பாறை மாதிரி, அவன் உடலில் சலனமில்லை! உற்சாகமற்ற மனநிலை! அணைந்துவிடும் தருணத்திலிருக்கும் ஒரு அகல் விளக்கு மாதிரி, பிரகாசமற்றிருந்த அவன் கண்களில் துயரத்தின் கருநிழல்!

நாற்பது வருடங்களுக்கு முன் வஞ்சகமில்லாமல் உழைக்கக்கூடியவனென்று ஊராரின் பாராட்டுதலை ஒருமுகமாகப் பெற்ற வின்யூ — இன்று செயல்திறன் இழந்துவிட்டவனாய், கிழவனாய், துயரத்தின் மனித வடிவமாய், அந்த மலைச்சரிவின் ஒரு கற்பாறைமீது உட்கார்ந்து கொண்டிருந்தான். விதவிதமான நிகழ்ச்சிகளைத் தன் சந்தர்ப்பப் படுதாவில், மாற்றி மாற்றித் தீட்டிக்காட்டும் மகத்தான சக்தி படைத்த காலம்,

அவனிடமிருந்த வலிமையைப் பறிமுதல் செய்துகொண்டது. இப்பொழுது, அவன் கிழவன் — உழைக்கும் திராணியிழந்து விட்ட கிழவன்!

பொன் விளைவதற்கு ஆதாரமாய் இருக்கும் மண் போற்றப் படுவதில்லை! அதைப்போல் தான், அந்த நாளைய அவன் உழைப்புக்கூட! என்றுமே எவராலும் போற்றப்பட்டதே கிடையாது. அபின் மயக்கத்திலும் பழமைப் போதையிலும், கூர்மை மழுங்கிவிட்ட அந்த ஏழ்மை மிக்க சீன விவசாயிகளின் அறிவு, உழைப்பின் பெருமையை — உழைப்பினால் பெறவேண்டிய உரிமையின் அவசியத்தை உணர்வதற்கான வலிமை பெற்றிருக்கவில்லை!

சளைக்காமல் உழைக்கக்கூடிய ஒரு பகுத்தறிவற்ற எருமை மாட்டிற்குக் கிடைக்கும் மதிப்புக் கூடத் தற்பொழுது அவனுக்குக் கிடையாது! காரணம்? அவன் செயல் திறனிழந்து விட்ட கிழவன். முள் தைக்காமல், பாதங்களைப் பாதுகாக்க முடியாத, அறுந்துவிட்ட பழஞ் செருப்பு அவன்! எப்படிக் கிடைக்கும் மதிப்பு?

வின்யூ, அந்த நாட்களில் சோர்வின்றி உழைக்கக்கூடியவன் — உழைத்தவன்தான்! ஆனால், மனிதவர்க்கத்தின் முதல் விரோதியாகிவிட்ட வஞ்சகக் கடவுள், அவனுக்குக் காணி நிலம்கூடக்கொடுக்காமல் அவனை வஞ்சித்துவிட்டான்.

நிலப் பிரபுத்வமென்ற போர்வைக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் மனிதப் பைசாசங்களின் விஷமனதைப்போல், கரடு முரடு தட்டிப்போன எத்தனையோ ஏகரா கரம்பு நிலத்தை, அவன், தான் கைப்பிடித்த ஏர் முனையால் புழுதி பறக்க உழுது பண்படுத்தி இருக்கிறான்... இதெல்லாம், இளமைத் துடிப்பு நிறைந்த அந்தக் காலத்தில்! இரத்தம் செத்துவிட்ட இப்பொழுது அது நினைக்கவும் முடியாத வெறுங் கனவு!

அடிவானில் அஸ்தமனத்திற்குப் பிந்திய செவ்விருள் படர ஆரம்பித்தது. உள்ளத் துயரைத் தெளிவாகக் காட்டும் ஒரு நீண்ட பெருமூச்சுடன் பாறை மீதிருந்து எழுந்தான் வின்யூ!

அவனுக்கு இப்பொழுது மிக மிக அவசரமாகக் கொஞ்சம் பணம் வேண்டும். உணவின்றி எத்தனையோ நாட்கள் அவன் பட்டினி கிடந்திருக்கிறான். உறக்கமற்றுக் கழிந்த இரவுகளுக்குக் கணக்கே கிடையாது. ஆனால் — அது இல்லாமல் அவனால் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. சுவாசிக்கும் காற்றைப்போல் அது அவ்வளவு முக்கியமானது.

அது இல்லாவிட்டால் நரம்புகளின் இழுப்பு ஏற்பட்டுப் பயங்கரமான வலிப்பு ஏற்பட்டு விடும். சித்தம், நிதான நிலையிழந்து இருண்டு விடும். வலிப்பின் கொடுமை தாளமாட்டாமல் உயிர் துடிதுடித்துப் பரிதவிக்கும்...

அவனிடம் கிழட்டுத்தனம் வந்துசேர ஆரம்பித்தபோது பத்து ஆண்டுகளுக்கு முன்பு, அவன் அந்தப் பழக்கத்திற்கு அடிமையானான்! காரணமாகத் தான். உழைத்துக் கூலிபெற்று வயிற்றைக் கழுவ முடியாத நிலையில், அவன், பட்டினி கிடக்க நேர்ந்தபோது, பசியை மறக்க வென்று, லின்யூ அபினி சாப்பிட ஆரம்பித்தான். துன்பக் கொடுமை நிறைந்த நிகழ்கால நினைவுகளிலிருந்து, அபினியின் போதை அவனுக்கு விடுதலை தந்தது. அது இல்லாமல் அவனால் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது!

இப்பொழுது, அபினி வாங்குவதற்குக் கூடக் கையில் காசு கிடையாது. உழைப்பின் திறன் மிகுந்த அந்தக் காலத்திலேயே சரியான வருவாய் கிடைக்கவில்லையென்னும்போது, இப்பொழுது மட்டும் எப்படிக் கிடைக்கும்?

அவசியம் அபினி வாங்க வேண்டும்!

அதற்குக் காசு? என்னென்னவோ எண்ணினான்! மூளைதான் குழம்பியது. தெளிவு பிறக்கவில்லை!

செத்துத் தொலைய வேண்டிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டு, அவனிடம் எலும்பும் தோலுமான ஒரு கிழட்டு எருமை இருக்கிறது. அதைக் கொன்று உரித்துத் தோலை விற்றால்......! அந்தத் தோலுக்கு நல்ல விலை கிடைக்காவிட்டாலும், சுமாரான விலை கூடவா கிடைக்காது? அடுத்த நிமிஷத்தில் அபின் வாங்கக் கிடைக்க வேண்டிய பணத்திற்கு எருமைத் தோலை நம்பிக்கொண்டிருந்தால் முடியாது. அதைக் கொன்று உரித்துத் தோலைச் சுத்தப்படுத்தி எடுப்பதற்குள் காலமும் கடந்துவிடும், கஷ்டமும் படவேண்டும். அதற்குள் அந்த வலிப்பும் இழுப்பும் வந்து விட்டால்......?

லின்யூ நடந்தான்!

கதவற்ற அவன் இருண்ட குடிசை சற்று தூரத்தில் தெரிந்தது. குடிசைக்கு வெளியில் சரளைக் கற்குவியல் மேல் உட்கார்ந்தான்.

சியாங்—கே—ஷேக் ஆட்சி மாதிரி, உலகம் ஒரே இருள் மயமாய்த் தோன்றியது.

அன்றிரவு சாப்பாட்டிற்குக் கூட வழியில்லை! பழக்கப்பட்டு விட்ட பசியும் பட்டினியும், உயிரைப் போக்கி விடாதென்ற துணிச்சல் அவனுக்கிருந்தது.

வானத்தில் நிலவு இருந்தது. ஆனால், மேகத்திற்குள் புதையுண்டு கிடந்தது. நல்ல இருள்! ஆரவாரம், அடங்கிக் கிடந்தது. இரவின் அமைதியை — அந்த அமைதியிலிருந்து பிறக்கும் பயங்கரத்தை அதிகரித்துக் காட்டுவதுபோல் தொடர்பு விட்டு விட்டு ஒலிக்கும் ஆந்தையின் அலறல்கள்! இடையிடையே சுவர்க்கோழிகளின் ரீங்காரம்!

லின்யூ சரளைக்கற் குவியலிலிருந்து எழுந்திருக்கவில்லை! இன்னும் சற்று நேரத்தில் தனக்கேற்படப் போகும் பயங்கர வலிப்பைச் சமாளித்துக் கொள்ள, தன்னைத் தானே சித்தப்படுத்திக் கொள்வது போல் மௌனமாக உட்கார்ந்திருந்தான்.

“ஐயா, கொஞ்சம் சோறு” என்று ஒரு உருவம் அவன் இருண்ட குடிசைக்கு எதிரில் நின்று அலறியது. துயரப் புன்னகையுடன் திரும்பிப் பார்த்தான் லின்யூ.

இருளில் உருவம் சரியாகத் தெரியவில்லை! இருந்தாலும், குரலிலே தெரிகிறதே! பெண் குரல்!

ஒரு பிச்சைக்காரி!

லின்யூ அருகில் வந்தான். உற்றுப் பார்த்தான். இளவயதுப் பெண்தான். அழுக்கேறிய அலங்கோலமான உடையுடன், பிச்சைக்காரி என்பதற்குச் சமுதாயம் வரம்புகட்டி வைத்திருக்கும் இலக்கணத்திலிருந்து வழு

வாமல் நின்றுகொண்டிருந்தாள். பசியென்பது அவள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

"ஏய், வூட்டுக்குள்ளே வா!" என்றான் வின்யூ.

"எங்க...?" அவள் கேட்டாள்.

"சோறு வேணுமா? வாணுமா?" என்றபடி குடிசைக்குள் நடந்தான். அவளும் தொடர்ந்தாள்.

"உக்காரு" என்றான்.

தூசி நிறைந்த புழுதித் தரையில் இருவரும் உட்கார்ந்தனர். விளக்கேற்றினான் அவன். மண்ணெண்ணெய் விளக்கின் மங்கலான ஒளியில் அவளைக் கூர்ந்து பார்த்தான். அவளும் பார்த்தாள்!

"இந்தா...சோறு தர்ரேன்னியே, எங்கே?" என்றாள் அவள்.

மண்ணெண்ணெய் விளக்கின் சுடர்காற்றில் அசைந்தாடியது, சோற்றை எதிர்பார்த்து ஆசையால் அசைந்தாடும் அவள் உள்ளத்தைப் போல்!

"சோறுதானே வேணும்? நிச்சயமாகத் தர்ரேன்...ஆனா நீ, நான் சொல்றபடி கேக்கணும்!"

"தட்டாமே கேக்குறேன்!"

"சரி, இங்கேயே கொஞ்ச நேரம் குந்தியிரு. இந்தாலே வந்திடுறேன்..."

குடிசையிலிருந்து வெளியேறி இருட்டில் கலந்தான் வின்யூ. சோர்வின் பெருமூச்சுடன் குடிசைக்குள் உட்கார்ந்திருந்தாள் அவள்!

●

சரளைக் கற்கள் காலில் உறுத்துவதையும் பொருட்படுத்தாமல் இருளில் நடந்தான் வின்யூ. ஒரு வீட்டின் முன்வந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

"வூட்டுலே யாரு?" என்று குரல் கொடுத்தான். யாராவது வெளிப்படுகிறார்களா வென்று கதவுப் பக்கம் கவனித்தபடி நின்றான்.

"யாரது?" என்ற எதிர்க் கேள்வி வீட்டினுள்ளிருந்து ஒலித்தது.

"நானுதாங்க, வின்யூ!..."

சிறிது நேரத்திற் கெல்லாம் பூதாகரமான ஆசாமி ஒருவர் வெளியில் வந்தார்.

"யாரு?...வின்யூ! நீயா? இந்த இருட்டு நேரத்துலே வந்திருக்கியே! என்ன சமாசாரம்?" என்றார் அவர்.

"என்ன சமாசாரங்க! மண்ணாங்கட்டி சமாசாரம்! ஒங்ககிட்டேதான் வந்தேன்" என்றான் வின்யூ, பலவந்தமாக வரவழைத்துக்கொண்ட உயிரற்ற சிரிப்புடன்!

"எதுனாச்சும் பணம் கிணம் வேணுமா?... இப்போ கொஞ்சம் பணமுடையான சமயம்... ரெண்டு நாளைக்கி முந்தித்தான் ரெண்டு ஜோடி ஒழவு மாடு வாங்கியாந்தேன்..." என்று மனமறிந்த பொய்ச் சொற்களால், தன்னிடம் பணமில்லை

யெனத் தெரிவித்துக்கொண்டார் அந்தப் பருத்த மனிதர்.

"பணத்தை உட்டுத் தள்ளுங்க. வான்னு வரும்...... போன்னுப் போவும்...மனுசனுப் பாத்துச் சம்பாதிக்கிறது தானுங்களே, பணம்?"—தன் விஷயத்திற்கான அடித்தளத்தைப் பலமாகப் போட்டான் வின்யூ.

"நீ சொன்னது நூத்துக்கு நூறு சரி... அது கெடக்கட்டும் வந்த விஷயத்தெச் சொல்லு!..."

"ஒண்ணுமில்லிங்க......ஒங்களுக்குப் பிரியமான ஒரு பண்டத்தெத் தேடிவச்சிட்டு வந்திருக்கேன்......"

"பண்டமா? விஷயத்தெ நல்லா வெளிச்சமாச் சொல்லு. இருட்டு மாதிரி மூடி மூடிப் பேசிறியே..."

"இப்புடிக் கிட்டே வாங்க... ஒரு உருப்புடி...... உங்களுக்குன்னே..."

"உருப்புடியா?"

"ஆமாங்க...அளகான உருப்புடிங்க...சும்மாத் தளதளன்னு நெல்லுப் பயிர் நாத்து மாதிரி பச்செசப் பசேல்னு......நேரா பாத்திங்கன்ன அப்புடியே கடிச்சித் தின்னுடுவீங்க..."

"நெசமாவா?..."

ஆசை குமிழ்விடும் சிரிப்புடன் மெய் மறந்து நின்றார், அந்தப் பருத்த ஆசாமி.

அவர் அந்த ஊரில் விரல் விட்டு எண்ணக்கூடிய நில முதலாளிகளில் ஒருவர். அவருக்கு மூன்று மனைவிமார்கள் உண்டு. மேலும் 'வைப்பு' என்ற பெயரிலும், 'காதலி' என்ற பெயரிலும், அவருக்குத் தற்காலிக மனைவிகளாகும் பெண்களுக்குக் கணக்கே கிடையாது. இருந்தால் என்ன? ஆசைக்கு எல்லைக்கோடு ஏது?......

"உருப்புடிக் கிட்டே போவலாமா?......"— அவர் அவசரப்பட்டார்.

"போவலாம்... கொஞ்சம் பொறுங்க..."

"என்ன வேணும்? ஏன் தயங்குறே?......"

"ஒண்ணுமில்லே... கொஞ்சம் பணம் வேணும்..."

"முன்பணமா?..."

"அப்புடி ஒண்ணும் இல்லிங்க. அவ வவுத்துக்கு எதுனாச்சும் வாங்கிக் குடுத்துட்டா, அப்புறம் விடிய விடியச் சொன்னபடி கெடப்பா?..."

"அது சரி...ஆமா...நானும் மறந்திட்டேனே?......உருப்படி யாரு?"

"அதையெல்லாம் ஒண்ணும் கேட்டுக்காதிங்க. நேராப் பாருங்க. புத்தம் புது வெண்ணெய் மாதிரி. நெலே கொள்ளாது மனசு..."

"அது சரியப்பா, வின்யூ! ஏது இந்தத் தொழில்லே எறங்கிட்டே? எத்தனெ நாளா இது?"

"கொஞ்ச நாளாத்தாங்க... இப்போ இதுதாங்க மவுசான தொழிலு? வயத்தை ரொப்ப எந்தக் கருமாதிப் பொளப்பெ யாவது செய்யத்தானே வேண்டியிருக்குது."

"ஆமாம்" என்றபடி அந்த ஆசாமி உள்ளே சென்று திரும்பி வந்தார். பணத்தை வின்யூ விடம் தந்தார்.

"பொறப்படலாமா?" என்று கேட்டார் அவர். அவ்வளவு அவசரம். பெண்—அனுபவிக்க வேண்டிய உயிர்ச் சித்திரமல்லவா? அவர் அவசரம் அவருக்குத்தான் தெரியும்!

"நீங்க இன்னும் கொஞ்ச நேரங் களிச்சி வாங்க. நானு போய் அவளெத் தயார்பண்ணி வைக்கிறேன்" என்ருன் வின்யூ.

"சரி" என்ருர் அவர். வின்யூ நடந்தான். சமுதாயத்தில் நிலப்பிரபுத்வம் பரப்பிக் கொண்டு நிற்கும் இருள் மாதிரி எங்கும் அடத்தியான காரிருள்!

●

அதுதான் அபின் கடை!

வின்யூ கடைக்கு வந்தான். கடைக்காரனிடம் பணத்தை நீட்டினன். அபின் கிடைத்தது. இனி ஒரு வாரத்திற்குக் கவலை கிடையாது.

அபின் கடையை அடுத்துச் சிறிது தூரத்தில் ஒரு தேநீர்க் கடை! அங்கு சென்ருன்!

ஒரு உருண்டை அபினை உள்ளே செலுத்தினன். அதற்கு மேல் ஒரு கிண்ணம் தேநீர்.

சோற்றை எதிர்பார்த்தபடி வீட்டில் உட்கார்ந்திருக்கும் அவள் நினைவு வந்தது. அவளுக்காக மீன் கறி வைத்த சோறு வாங்கிக் கொண்டான்.

வீட்டை நோக்கி நடந்தான்!

சோற்றுப் பொட்டலத்தை அவளிடம் கொடுத்தான் வின்யூ! அவளுக்கு எல்லையற்ற மகிழ்வு!

சோறு — அதுதான் அவளுக்கு அந்த நேரத்தில் புராணிகன் கதைக்கும் சொர்க்கம்! பசி தீர உண்டாள்.

அபினி வேலைசெய்ய ஆரம்பித்தது. உலகத்தை — சுற்றுச் சார்பை — நெஞ்சை யழுத்தும் துயரை மறந்து, மயங்கி ஒரு மூலையில் படுத்தான்.

முதலாளித்வ இருளைக் கிழித்துக்கொண்டு கிளம்பும் பொதுஉடமைப் பிரகாசம் மாதிரி மேகத்தைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது அழகு நிலா!

பெண்ணுடன் சல்லாபிக்க வேண்டுமென்றமனத்தினவுடன் வந்த அந்தப் பருத்த ஆசாமி, குடிசைக்கு வெளியில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தார். அவன் வீடு அவருக்குத் தெரியும்.

"வின்யூ! வின்யூ..." குரல் கொடுத்தார்.

பதில் இல்லை!

அபின் போதை தந்த சொர்க்கத்தில் இருந்தான் வின்யூ! பொருளாதார ஏற்றத் தாழ்வால் — சீரழிந்துவிட்ட சமுதாய அமைப்பால், நரகத்திலும் கேவலமாகிவிட்ட மண்ணிலிருந்து கூப்பிடும் அந்த மனித மிருகத்தின் கூக்குரல், சொர்க்கத்தில் இருக்கும் வின்யூவின் காதுகளில் எப்படி விழும்?

இரவில் தனியாக இருக்கும்போது
தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOK SHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தினால் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்றாகவும், தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்துகொள்வார்கள். நல்லவிதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் வெகு நன்றாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—12—0

O

BED ROOM PHOTOS
படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்குப் படுக்கை அறைக் காட்சிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 2—4—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட சாம்பிள் செட்டின் விலை ரூ. 1—4—0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்கவேண்டும்.

O

PARIS ART HOUSE

DURGIANA (170), AMRITSAR

அரிய நூல்!

பேச்சுரிமை

'கிளர்ச்சி' ஆசிரியர் இரா. சு. தங்கப்பழம் தீட்டியது.

விலை இரண்டணா

*

'வழிப்போக்கன்' வரைந்தவை:

அண்ணா யார்?

(இரண்டாம் பதிப்பு)

விலை எட்டணா

மாஸ்கோவில் சர்ச்சில்!

விலை ஆறணா

அழகிய முகப்புடன் கூடிய இந் நூல்களுக்கு விற்பனையாளர்க்கு 25% கழிவு

விவரங்கட்கு:

செல்வம் பதிப்பகம்

வெண்கலக்கடைத் தெரு — மதுரை.

K.P. கேஸ்ட்ராயில்

தனி சித்தாமணக்கு விதையிலிருந்து தயார் செய்தது. குமட்டல், கசப்பில்லாதது. குழந்தை முதல் விருத்தர் வரை உபயோகிக்கலாம். ரசாயன முறைப்படி தயார் செய்யப்பட்டது.

K.P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்
ஆர். எஸ். புரம்.... கோயமுத்தூர்.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD at PONNIACHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21

நினைவுச் சின்னம்

ரூ. 1-0-0

தோழர் இளமைப்பித்தனின் மூன்றுவது சிறுகதைத் தொகுதி இது; தமிழ் மக்களின் தணியாத கலையார்வத்திற்கு இந்நூலின் கருத்தாழமே போதிய கலைச்சின்னம்.

கடல் முத்து

ரூ. 1-0-0

மூச்சுக் கொணரும் சிற்பிகள், மூச்சை அடக்கி, மூவாயிரம் அடி ஆழம் அடியில் சென்று மக்களுக்கு நன்முத்துத் தருகின்றனர். நண்பர் ஆறுமுகம் இலக்கியக் கடலிலே மூழ்கி ஒப்பற்ற கதை முத்துக்களை வழங்கியுள்ளார்.

உலக அரங்கில்

ரூ. 1-0-0

உலக அரங்கில், தோழர் டி. கே. சீனிவாசன் சிந்தனை அரங்கைக் காட்டுகிறார். சிறுகதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொள்கைக்காகப் போராடுகின்றன. நல்ல கருத்துக் குவியல்.

தபாலாபீஸ் விநோதங்கள்

ரூ. 0-8-0

பொதுமக்கள் அடிக்கடி கூடும் மனைகளில்தான் எத்தனை விந்தைகள் — எத்தனை கூத்துக்கள்! தபாலாபீஸ் சகல முனைகளும் குவியும் கூடம் — அங்கு நடக்கும் திருவிளையாடல்கள் ஒன்றா, இரண்டா? அதன் இனிய படப்பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள்.

விபரமான விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

பொன்னி லிமிடெட்

16, சேணியம்மன் கோவில் தெரு,

தண்டையார்ப்பேட்டை — சென்னை - 21

REGD. NO. M. 4849